★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 16 ஸபர் 7 இதழ் 260
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 1-11-84

## 'இந்திராவின் கனவு நனவாகவேண்டும்!'

### புதிய பிரதமர் ரஜீவ்காந்தி நாட்டு மக்களுக்கு செய்தி

[புதுடில்லி]

''இந்தியாவின் ஐக்கியம், ஒருமைப்பாடு எந்தக்கட்டத்திலும் பாதுகாக்கப்படவேண்டும். இதனைசெய்வதுதான் மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு நாம் செய்யும் அஞ்சலி'' என்று புதிய பிரதமராக நேற்று மாலை தெரிவுசெய்யப்பட்ட திரு. ரஜீவ் காந்தி தெரிவித்தார்.

நேற்று நள்ளிரவு வானொலி மூலம் அவர் நாட்டு மக்களுக்கு விடுத்த முதற் செய்தியில் மேலும் தெரிவித்ததாவது:

'கொலையுண்ட திருமதி காந்தி எனது அன்னைமட்டு

(5ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## எம். ஜி. ஆர். உடல் நிலை

[சென்னை]

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்றுப் பிற்பகல் அபாய நிலையை அடைந்தபோதிலும், நேற்றிரவு தீவிர சிகிச்சைக்குப் பின்னர் ஆபத்தான கட்டத்தைக் கடந்துவிட்டதாக 'அப்பலோ' மருத்துவமனையிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

பாரதப் பிரதமர் திருமதி காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி நேற்று நள்ளிரவுவரை அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை.

● இந்தியாவின் தவப் புதல்வி இந்திரா

இரக்கமற்ற கொடியவரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானர்!

# சேதிகேட்டு பாரதம் ஸ்தம்பிதம்

# சனியன்று இறுதியாத்திரை!

## புதிய பிரதமராக ரஜீவ் ஒருமனதாகத் தெரிவு

நமது வெளிநாட்டு செய்திச் சேவை

பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி (66 வயது) நேற்றுக் காலை, இரக்கமற்றவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானர் எனும் துயரச் செய்தியை 'ஈழநாடு' மிகுந்தமனக்கவலையுடன் தெரிவிக்கின்றது. தொட்டதெல்லாம் துலங்குவது போல், சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெற்ற பாரத அன்னை இந்திராவின் இறுதிச் சடங்குகள், நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை நான்கு முப்பதுக்கு இந்தியத் தலைநகரில் நடைபெறும்.



''என்பும் சதையுமாய்
இத்தகையதோர் மாந்தர்
இப்புவியில் வாழ்ந்தார் என்பதை
நம் பின் வருவோர்
நம்பவும் மறுப்பார்'.

—அல்பேட் ஐன்ஸ்ரைன்

(அண்ணல் காந்தி மறைந்தபோது கூறியது)

## கொலையுண்ட முதற் பெண் பிரதமர்

உலகின் இரண்டாவது பெண் பிரதமர் எனும் புகழைப் பெற்ற திருமதி இந்திராகாந்தி; இருபத்தொரு வயதில் காங்கிரஸில் சேர்ந்து ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தில் முன்னின்ற காரணத்தினல் பதின்மூன்று மாதம் சிறைவாசம் கண்டு சர்வதேசப் புகழ்பெற்று உலகில் சுட்டுக் கொல்லப்பட்ட முதலாவது பெண்பிரதமர் எனும் பேருடன் நேற்று புகழுடம்பெய்தினர்! அன்னரின் மறைவைத்தொடர்ந்து பாரதத்தின் புதிய பிரதமராக, திருமதி இந்திராகாந்தியின் மூத்த புதல்வர் திரு ரஜீவ் காந்தி நேற்றுமாலை பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

## இந்திய தீபகற்பம் கண்ணீரில் மிதக்கிறது

திருமதி இந்திராகாந்தி நேற்றுக்காலை சுட்டுக்கொலை செய்யப்பட்ட செய்தி, உலகம் பூராவுமே காட்டுத்தீபோல பரவிற்று.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான திருமதி இந்திராகாந்தி நேற்றுப் பகல் ஒருமணி முப்பது நிமிடமளவில் மரணத்தைத் தழுவிக்கொண்டார். இச்செய்தி இந்தியா முழுவதுமே ஸ்தம்பித்தது!

இந்திய தீபகற்பமே கண்ணீரில் மிதக்கிறது என்று சால்லுமளவுக்கு பாரதம் செயலிழந்தது!

## நாளை மறுதினம் தகனக்கிரியை

திருமதி இந்திரா காந்தியின் பூதவுடல் நேற்று மாலை 'சர்ஜ்ஜார்ஜங்' வாசஸ்தலத்துக்குக் கொண்டுவரப்பட்டது நாளை காலை ஏழு மணிமுதல் மக்கள் அஞ்சலிக்காக புதுடில்லி தின்மூர்த்தி பவனில் பூதவுடல் வைக்கப்படும்.

## புதிய பிரதமர்: நான்கு அமைச்சர்கள்

இதற்கிடையே நேற்றுப் பிற்பகல், காங்கிரஸ் பாராளுமன்றக்குழு கூடி, புதிய பிரதமரை ஏகமனதாகத் தெரிவுசெய்

(5ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## இந்திராவைக் கொன்றவன்

### 8 ஆண்டுகள் பணிபுரிந்தவன்

[புதுடில்லி]

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைக் கொலை செய்த மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவர் அவரது வீட்டில் எட்டு ஆண்டுகள் பணிபுரிந்தவர் என்று கூறப்படுகிறது

## "சீக்கியர்களே பொறுப்பு!"

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி கொலையுண்டது தொடர்பாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட நபர் ஒருவர் சீக்கியர்களே இந்தக்கொலைக்கு பொறுப்பேற்பதாகவும். தாம் அவரை பழிவாங்கி இருப்பதாகவும் தெரிவித்ததாக கூறப்பட்டது.

## அமிர், சிவா செல்வர்

பாரதப் பிரதமரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக கூட்டணித் தலைவர்

[5ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## 'அமிர்' அனுதாபச் செய்தி

(யாழ்ப்பாணம்)

''மனித இனத்தின் மாபெரும் தலைவர்களில் ஒருவரை கொலை காரர்களின் துப்பாக்கிக் குண்டுகள் வீழ்த்தி விட்டது'' என்று தமிழர் விடுதலை கூட்டணிச் செயலா

(5ம் பக்கம் ம் கலம் பார்க்க,

## யாழ்ப்பாணம் சோகமயம்!

(வண்ணார்பண்ணை)

பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மரணச்செய்தி கேட்டு யாழ்ப்பாண மக்கள் அதிர்ச்சிக்கும் துயரத்துக்கும்

(5ம் பக்கம் 1ம் கலம் பார்க்க,

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பரந்தன் 1-ம் கட்டை, புதுக்குடியிருப்பு வீதியில் 5 ஏக்கர் காணி (ஒருபோக நெல்வயல்) விற்பனைக்குண்டு. தொ ர்பு; இ. தெய்வேந்திரன், இல: 10 நவீனசந்தை, சாவகச்சேரி, தொலைபேசி: 237 501

கே.கே.எஸ். வீதி மருதனார் மடம் சந்தியில் வியாபார ஸ்தாபனமாகவோ/ வேறு தேவைகட்கு பயன்படக்கூடிய ஒரு பரப்புக்காணி மாடிக் கட்டட அமைப்புக்குரிய தளத்துடன் கீழ்மாடி பூர்த்தியான நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: உ. சந்தானகிருஷ்ணன், உடுவில்மகளிர் கல்லூரி, சுன்னாகம். 448

உடுவில் ஆர்க் (ARK) லேனில் பிரதான வீதியிலிருந்து 100 யார் தொலைவில் 1½ பரப்பு காணி முற்றுகக் கட்டி முடிக்கப்படாத வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வோட்சன், 47, உடுவில் வீதி, மானிப்பாய். 527

அரியாலை கிழக்கு கண்டி வீதியிலிருந்து 5 மைல், அன்னை வேளாங்கன்னிக்கு அருகாமையில் 20 பரப்புகாணி தென்னைகளோடு காணி உடன் விற்பனைக்கு உண்டு. வ. விநாயகமூர்த்தி, 88/2, சேர். பொன். இராமநாதன் றோட், திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். 522

அல்வாய் வடக்கு வீரபத்திரர் கோவிலுக்கு முன்பாக றோட்டிலிருந்து 50 யார் தூரத்திற்குள் கரண்டகப்பற்றை என்ற பெயருடைய 10 பரப்பு நாற்சதுரக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: K. P. சத்தியமூர்த்தி முருகன் கோவில் வீதி, நெல்லியடி, கரவெட்டி. 518

பலாலி வீதி, ஆலடிச் சந்தி, கந்தர்மடத்தில் இருக்கும் 277—279-ம் இலக்கமுற்ற இரு கடைகள் விற்பனைக்கு உடன் உண்டு. விபரம்: இல. 277, மூடுசாந்து கட்டிடம் 25 அடி நீளம் 16 அடி அகலம். இல. 279, 15 அடி நீளம் 14 அடி அகலம். மின்சார வசதிகளுடன் உண்டு. தொடர்பு: உரிமையாளர்; க. முருகரட்ணம், இல. 281, பலாலிவீதி, ஆலடிச் சந்தி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 528

## தேவை

எவர்சில்வர் ஸ்தாபனத்தில் தொழில் பழகவிரும்பும் 20வயதுக்குட்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கவும். Eversilver Industries (Pte) Ltd., Industrial Estate, Atchuvely. தபால் மூலம்மட்டும் தொடர்புகொள்ளவும். 507

## தேவை

அனுபவமுள்ள பெண் தமிழ் தட்டெழுத்தாளர் தேவை. தமிழ்/ஆங்கில தட்டெழுத்து அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 5-11-84-ம் திகதிக்கு முன் கல்வித்தராதரம், அனுபவம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு நற்சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 531, மே/பா ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 531

1/2'', 3/4'' சல்லி, கண்டா வளைமணல், கல்லு, மணல், concrete கலவை மெஷின் ஆகியவை உடன் தேவை நேரில் வரவும். சோமசுந்தரம், 50, ஸ்ரீவேங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். 524

யாழ் மாவட்டத்திலுள்ள அடைவுக்கடை ஒன்றிற்கு எண்கணக்காளர் (16 வயதிற்கும் 25 வயதிற்கும் இடையில்) தேவை. 10-11-84இற்கு முன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: விளம்பர இல. 523. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 523

## வாடகைக்கு

கே.கே.எஸ். வீதி, சி. எஸ். கே. சந்திக்கருகில் தொலைபேசி வசதியுடன், எந்த வியாபாரமும் உடன் ஆரம்பிக்கக்கூடிய நிலையில் கடை வாடகைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22762. 525

## காணவில்லை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் எனது அடையாள அட்டையும் (இல. 600561154 X) றைவிங் லைசன்சும் (இல. DL 518529) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து எஸ். சிவராசா, பொன்னாலை, சுளிபுரத்தில் ஒப்படைக்கவும். 519

## வகுப்புகள்

பிராஜ்மல் என்ரபிறைசஸ் - 5, சென். ஜேம்ஸ் கிழக்குவீதி' குருநகர், யாழ்ப்பாணம் — பின்வரும் வகுப்புகள் 3-11-84 தொடக்கம் ஆரம்பிக்கப்படும் —ஆங்கிலம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, நடைமுறைக் கணிதம், மனையியல், பொது ஜனத்தொடர்புசாதனம், பாவனைப்பொருட்கள் விற்பனையும் சேவையும். சேர விரும்புவோர் உடனடியாகப் பதிவு செய்யவும். 516

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) சுன்னாகம்

### அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் 4000ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவு சீனியும், கழிவு மாவும், வெற்று பரல்களும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-உம். ஏனையவற்றிற்கு ரூபா 50/உம் மீளளிப்பு வைப்புப் பணமாகச் சங்கத்தில் செலுத்திச் சங்க வேலை நாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 9-11-84 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.
29-10-1984.

532

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

ஏழாலை ஊரெழு வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லப்பா இராசநாதன் என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/222

எதிராக

செல்லப்பா இராசநாதன் கைம்பெண் சிவக்கொழுந்து, ஊரெழு வடக்கு, சுன்னாகம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு தை மாதம் 1-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

வரையினர்;
க. வைரவநாதன்,
மனுதாரின் சட்டத்தரணி.
(514)

## கிளிநொச்சியில் இன்று நடக்கும் போஷாக்குவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட உணவு போஷாக்கு வாரவிழா இன்று வியாழக்கிழமை மாலை கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில்அரசாங்கஅதிபர் திரு. என். ஜெயநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவிற்கான ஏற்பாடுகளை திட்டமிடல் அதிகாரி திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசா செய்துள்ளார்.

இவ் வைபவத்தை யொட்டி கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சிறந்த ஆரோக்கியக்குழந்தைக்கு கரைச்சி லயன்ஸ் கழகமும் சிறந்த ஆரோக்கிய முதியவருக்கு கிளிநொச்சி பரந்தன் றோட்டறிக் கழகமும் பரிசு வழங்கவுள்ளன.

வருகையாளருக்கு சத்துணவான இலைக்கஞ்சிப்பானம் கிளிநொச்சி பரந்தன் றோட்டறிக் கழகத்தால் வழங்கப்படவுள்ளது.

விழாவில் றோட்டறிக்கழகத் தலைவர் ப வை. ஜெயபாலன், லயன்ஸ்கழகத்தலைவர் ஜோசப் நாயகம் ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

மு.க. முத்துக்குமார்
சட்டத்தரணி
பருத்தித்துறை.

## பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

கரவெட்டி மேற்கைச்சேர்ந்த காலஞ்சென்ற கந்தப்பு ஜெயராஜா என்பவரது மரணசாதனமில்லா சொத்து விடயத்தில்,

—மரணமெய்தியவர்

கந்தப்பு ஜெயராஜா கைம் பெண் இந்துமதி 'சிவஒளி வாசா' புதுத் தோட்டம், கரவெட்டி

—மனுதார்

மரணசாதன நியாயாதிக்க } Testy/1184

எதிர்

1. ஜெயராஜா ரகேஷ்
2. ஜெயராஜா மகள் ராஜி
3. ஜெயராஜா ரமணன்
   1-3 பராயமடையாத எதிர்வாதிகள் தங்கள் வழக்குப் பாதுகாவலர் 4ம் எதிர்வாதி மூலமாக
4. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் எல்லோரும் 'சிவஒளிவாசா' புதுத் தோட்டம் கரவெட்டி.

—எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்டமரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது எனவே அக்கறை உள்ள எவரேனும் 1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ந் திகதி காலை 9-00 மணிக்கு இம் மன்றின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதுஎன்பதற்குகாரணம்ஏதும் இருப்பின் அவற்றைத் தெரிவித்துக் கொள்ளுமாறு இத்தால தேவைப்படுத்தப்படுகின்றார்.

1984ம் ஆண்டு ஐப்பசிமாதம் 15ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்
(ஒப்பம்)
பதிவாளர்
மாவட்ட நீதிமன்று
பருத்தித்துறை

வரைவு
மு.க. முத்துக்குமார்
மனுதாரின் சட்டத்தரணி
38

## பகலில் வீட்டில் இரவில்....

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் தினசரி 7 மணி தொடக்கம் 9 மணி வரை கடல் பகுதியில் பீரங்கிக் குண்டுகள் முழங்குவதால் மக்கள் பீதியுற்று குடிபெயர்ந்து வாழ்ந்து வருகிறார்களாம்

இந்நேரங்களில் வீட்டு வெளிச்சங்களை அணைத்து விட்டு பெறுமதியான பொருள்களையும் சுமந்து கொண்டு வயல் வெளிகளை நாடுகின்றார்களாம் பின்னர் காலையில் வீடுவருகிறார்களாம். [மா]

## இலவச சுருக்கெழுத்து பயிற்சி

(புலோலி)

1985ம் ஆண்டு சர்வதேச இளைஞர் ஆண்டாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதை யடுத்து வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன் புரிச் சங்கம் பருத்தித்திறை, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்களின்ஆதரவுடன் இளைஞர், யுவதிகளுக்கான இலவச தமிழ், ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகளை நடாத்தவுள்ளது.

இவ்இலவச தமிழ் ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சிகளை மேற்கொள்ள விரும்பும் இளைஞர் யுவதிகளைத் தெரிவு செய்து அனுப்புமாறு வடமராட்சிப் பகுதியில் உள்ள சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை வேலும்மயிலும் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ ஐயாத்துரை ஆகியோர் கேட்டுள்ளனர்.

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நவக்கிரி அ. மி.த.க. பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட இத்தியடிபாதி என்றகாணியை வட்டாரக்கல்வியதிகாரி திரு அ. வ. தங்கராசா தலைமையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், கிராம முன்னேற்றச் சங்கமும் இணைந்து சிரமதான மூலம் துப்புரவு செய்துள்ளனர். எதிர்வரும் சனிக்கிழமையும் தொடர்ந்து சிரமதானம் நடைபெறவுள்ளது.

கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும், BERLIN செல்ல விமானச் சீட்டுக்களை உடனடியாகப் பதிவு செய்வதற்கும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

வீடு / காணி விற்பனவு

1. யாழ். கச்சேரிக்கு அண்மையில் கண்டி வீதியில் இருந்து 25 யார் தூரத்தில் 10 பரப்புக் காணி பிரித்தும் கொடுக்கப்படும்.
2. யாழ். ஆனைக்கோட்டை உயரப்புலம் (கிறிஸ்டியன் மிஷன்) மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் வீட்டுடன் 4 பக்கமும் சுற்று மதிலுடன் 4 பரப்புக் காணி.

வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்திற்கு
25% தொடக்கம் 30% வரை வட்டி
மாதாந்தம்/வருட முடிவில்
வட்டி பெற்றுக்கொள்ளலாம்.
விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
போன்: 23698

# பாக். ஆயுத குவிப்புக்கு எதிராக

# இந்தியாவும் ஆயுத பலத்தைப் பெருக்கும்!

## பிரதமர் இந்திரா அறிவிப்பு!

புவனேஸ்வரா, அக்.31

''பாகிஸ்தான் தனது ஆயுத பலத்தை அதிகரித்து வருவதினல் அதற்கு சமமான வகையில் இந்தியாவும் தனது ஆயுத பலத்தை அதிகரித்துக்கொள்ளவேண்டியுள்ளது'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.



ஒரிஸாவின் தலைநகர் புவனேஸ்வராவில் நிருபர்கள்மத்தியில் பிரதமர் இந்திராகாந்தி பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; ''பாகிஸ்தான் தனது பாதுகாப்புத்தேவைக்கு அதிகமாக அமெரிக்காவிடமிருந்து நவீன ரக ஆயுதங்களைப் பெற்று வருகிறது. அமெரிக்காவின் இந்த ஆயுத விற்பனை குறித்து இந்தியா மிகுந்த கவலைகொண்டுள்ளது.

''பாகிஸ்தான் தனது மேற்கு எல்லையில் அப்கானிஸ்தானில் சோவியத் படைகளின் ஆக்கிரமிப்பு காரணமாக இத்தகைய ஆயுதங்களை பெற்றுக்கொள்வதாக தெரிவிக்கின்றது. ஆனல் உண்மையில் இவ்வாறு பெறப்படும் ஆயுதங்கள் அங்கு பயன்படுத்தப்படமாட்டாது. மாருக இந்தியாமீது தான் பயன்படுத்தப்படும்.

''பாகிஸ்தான் எப்போதுமே இந்தியாமீது ஒரு பகை உணர்ச்சியைக்கொண்டுள்ளது குறிப்பாக இந்திய விமானக் கடத்தல்காரர்களுக்கு உதவிபுரிவதன் மூலமும், இந்தியாவுக்கு எதிரான சக்திகளை வளர்ப்பதிலுமே பாகிஸ்தான் முயற்சி செய்துவருகிறது. ஆனல் இந்தியா அந்த நாட்டுடன் அமைதி வழியில் ஒற்றுமையை வளர்க்கவே விரும்புகிறது'' என்ருர்.

நாட்டில் ஜனதிபதி ஆட்சியை ஏற்படுத்துவது தொடர்பாக அவர் குறிப்பிட்டு பேசுகையில் ''நாட்டில் அந்த ஆட்சிமுறை விரைவில் ஏற்படமாட்டாது ஆயினும் நாட்டின் நலனுக்கு அந்த ஆட்சி சிறந்ததாயின் அதனை ஏற்படுத்துவது தொடர்பாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஆனல் இது ஒரு நீண்டகால அடிப்படையில்தான் ஏற்படும். நாட்டில் ஜனதிபதி ஆட்சியை ஏற்படுத்துவது தொடர்பாக ஏற்படும் நன்மை தீமைகள்பற்றிய விவாதங்கள் நடைபெறுவதனை நான் வரவேற்கின்றேன்'' என்று குறிப்பிட்டார்.

நாட்டின் தேசிய நலனில் சகல எதிர்க்கட்சிகளுக்கும் அக்கறையில்லை என்றும் அவர் தெரிவித்தார். (சூ)

### அமெரிக்க ஜனதிபதி




#### பெண் என்பதால் பெருமை

உப ஜனதிபதி வேட்பாளராக முதன்முறையாகப் பெண் ஒருவர் போட்டியிடுவது குறித்து தற்போதைய உப ஜனதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் மனைவி பெருமைப்படுகிருராம்!

இதனை திரு ஜோர்ஜ் புஷ் அவர்களே ஒரு பிரசார மேடையில் கூறினர். ''திருமதி ஜெரால்டின் பெராரோ என்னை எதிர்த்துப் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி உப ஜனதிபதி வேட்பாளரானபோதிலும், அவர் ஒரு முதல் பெண் உபஜனதிபதி வேட்பாளர் என்பதில் எனது மனைவியும், மகளும் அவர் குறித்துப் பெருமைப்படுகிருர்கள்'' என்று கூறினர்.

திருமதி புஷ் அண்மையில் ஒரு தடவை திருமதி பெராரோ குறித்துத் தவருகப் பேசியதற்கும் தொலைபேசியில் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாராம்.

#### அமெரிக்காவில் புதிய கட்சி?

குடியரசுக் கட்சி — ஜனநாயகக் கட்சி ஆகிய இரண்டுமே அமெரிக்காவிலுள்ள இருபெரும் அரசியல் கட்சிகளாகும். எதிர்வரும் ஜனதிபதித் தேர்தலில் திரு. றீகனின் குடியரசுக் கட்சி அதிபெரும்பான்மை வெற்றி பெற்ருல் அமெரிக்காவில் ஒரு புதிய அரசியல் கட்சி உருவாகலாம் என்று திரு. மொண்டேலின் சகா ஒருவர் கூறியுள்ளார்.

ஜோன் அன்டர்சன் என்ற இந்த மொன்டேல் ஆதரவாளர் 1980 ஜனதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகித் தோல்விகண்டவர். ''மொன்டேலின் ஜனநாயகக் கட்சி படுதோல்வி அடைந்தால் அக்கட்சி தொடர்ந்து செல்வாக்குடனிருக்க முடியாது.

அதன் பழமையான கொள்கைகளைத் திருத்திப் புதியனவற்றைப் புகுத்தும் வகையில் அதன் கோட்பாடுகளுக்கமையவே ஒரு புதிய கட்சி உருவாக இடமுண்டு. பல அமெரிக்கர்களும் புதிய பெரும் கட்சி ஒன்றையே விரும்புவார்கள்'' என்பது அன்டர்சனின் மதிப்பீடாகும்.

இப்பூகோளத்தை ஆபத்திலிருந்தும் காப்பாற்றுவதே ஒரு அமெரிக்க ஜனதிபதியின் பணியாக இருக்க வேண்டும். ஆனல் திரு. றீகன் இதிலிருந்தும் மிகவும் விலகிச்செல்கிருர் என்பதும் இவரின் கருத்தாகும். (கி)

### தேர்தல் செய்திகள்

## சோவியத் நவீன ஆயுதங்கள் இந்தியாவுக்கு கிடைக்கும்!

### பாதுகாப்பு அமைச்சர் மாஸ்கோ விரைவு

(மாஸ்கோ)

சோவியத்யூனியனிடமிருந்து அதிகளவில் நவீன ஆயுதங்களை பெற்றுக்கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. எஸ். பி. சவான் மாஸ்கோ போய்ச் சேர்ந்துள்ளார்.

அவர் அங்கு தங்கியிருக்கும் நாட்களில் சோவியக் தலைவர்களுடன் இந்தியாவின் பாதுகாப்பு குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதோடு, முக்கியமாக சோவியத்பாதுகாப்பு மந்திரி மார்ஷல் உஸ்ரினேவுடன் இந்தியா பெற்றுக்கொள்ளவிருக்கும் நவீன அதிநவீன ஆயுதங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கிக் கொண்டிருக்கும் உலகிலேயே அதிசிறந்த விமானமான எப் 16 க்கு சமமான சோவியத்தின் திருத்திய மிக் - 30, மிக் - 32 ஆகிய விமானங்களை பெருமளவில் இந்தியா இப்பேச்சுவார்த்தையின்போதுபெற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

அத்துடன் நவீன ரகடாங்கிகள், சிறிய அளவிலான ஏவுகணைகள் நீர்மூழ்கிகள் மற்றும் கடற்படை, விமானப்படைக்கு தேவையான சகல நவீனஆயுதக் கொள்வனவு குறித்தும் இரு அமைச்சர்களும் பேச்சு நடத்துவர்.

இந்தியாவின் பாதுகாப்புக் கருதி இத்தகைய அதிநவீன ஆயுதங்களை வழங்குவது என்று இந்த ஆண்டின் ஆரம்பத்தில் சோவியத் யூனியன் அறிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்தே தற்போது இந்தியா பாதுகாப்பு அமைச்சர் மாஸ்கோ சென்றுள்ளார்,

இந்த ஆயுதங்கள் இந்த ஆண்டு முடிவுக்குள் இந்தியாவுக்கு கிடைத்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகன் ஆலயத்தில் வியாவில் சனசமூக நிலைய ஆதரவில் தமிழகமுதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் நலம்வேண்டி விசேட பூசையும் பிரார்த்தனையும் நடைபெற்றது.

## எண்ணெய் குறைப்பை பகிர்வதில் 'ஒபெக்' நாடுகள் இணக்கம்!

ஜெனிவா, அக். 31

எண்ணெய் ஏற்றுமதிசெய்யும் நாடுகள் ஸ்தாபனமான 'ஒபெ'க்கில் அங்கம் வகிக்கும் 13 நாடுளும் தாம் மொத்த உற்பத்தியில் குறைத்துக் கொள்வதாக அறிவித்த 9சதவீத உற்பத்திக் குறைப்பைத் தம்மிடையே பகிர்ந்துகொள்ள இணக்கம் கண்டுள்ளன

ஜெனிவாவில் நேற்று நடைபெற்ற 'ஒபெக்' நாடுகள் கூட்டத்திற்குத் தலைமை வகித்த இந்தோனேஷிய எண்ணெய்த் துறை அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார்.

''தாபன நாடுகள் குறைத்துக்கொள்வதாக அறிவித்த 15 லட்சம் பீப்பா மசகு எண்ணெய்க் குறைப்பு இன்றிலிருந்து அமுலாகும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

## சோவியத்— சீன ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை

பீக்கிங், அக். 31

சோவியத் யூனியனுக்கும், சீனவுக்கும் இடையே நடைபெற்ற 5வது சுற்றுப் பேச்சுவார்த்தைகள்சுமுகமானமுறையில் நடந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பீக்கிங்கில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் சோவியத் வெளியுறவு துணை அமைச்சர் மற்றும் அதிகாரிகளும், சீனதரப்பில் சீன துணைவெளியுறவு அமைச்சரும் கலந்துகொண்டனர்

இருநாடுகளும்தமக்கிடையே உறவுகளை வளர்த்துக்கொள்வதில் இணக்கம் தெரிவித்துள்ளன ஆனலும் சீன எல்லைகளில் சோவியத் படைப்பெருக்கம், அப்கானிஸ்தான், கம்பூச்சியப் பிரச்னை என்பன தொடர்பான முரண்பாடுகள் இரு நாடுகளுக்கிடையேயும் இருந்துகொண்டே இருக்கின்றன.

### நேபாளத்துக்கு உதவி

[காட்மண்டு]

நேபாளத்தின் விவசாய நீர்ப்பாசன திட்டத்திற்கு இந்திய 20 கோடி ரூபா வழங்கியுள்ளது இதற்கான ஒப்பந்தம் அண்மையில் இருநாடுகளிடையேயும் கைச்சாத்திடப்பட்டது

விவசாயத்தில் முழுமையாக தங்கியிருக்கும் நேபாளம் முழுமையான நீர்ப்பாசன வசதிகளை கொண்டிருக்கவில்லை இதனல் இந்தியா இந்த நாட்டின் பாரிய நீர்ப்பாசன கால்வாய்களை வெட்டுவதற்கு இவ்வுதவி வழங்கியுள்ளது.

## நாகர் கோவில் புதிய வானெலி நிலையம்!

### மத்திய அமைச்சர் திறந்து வைத்தார்

[நாகர்கோவில்]

தமிழ்நாட்டில் நாகர்கோவிலில் புதிய வானெலி நிலையம் ஒன்று நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிலையத்தை மத்திய செய்தித்துறை இணையமைச்சர் ஜனப் குலாம் நபி அஸாத் முறைப்படி திறந்துவைத்தார்.

நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசிய அமைச்சர், ''வானெலி, தொலைக்காட்சி சேவைகளில் தமிழ்நாடுதான் முதலிடம் பெறுகிறது. இந்தியாவில் 86 5 வீதமான மக்கள் இத்தகைய வசதிகளை பெறுகிருர்கள் ஆனல் தமிழ்

(7ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

### மணிவாக்கு

உலக அறிவும் உள்ள அறிவும் ஆத்மாநுபவமும் வாழ்வில் இணைவதுதான் கடவுள் தன்மையாகும்.

— கன்பூஷியஸ்

## நமது நோக்கு

# ஜப்பானிய பிக்குவின் மர்மக்கொலை

வடபகுதியில் அமைதிப்பணியில் ஈடுபட்டிருந்த ஜப்பானிய பிக்கு ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் எதற்காக கொல்லப்பட்டார் என்பதோ, எவரால் கொல்லப்பட்டார் என்பதோ இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை.

பொதுவாக ''வடபகுதி தீவிரவாதிகளே'' இதனைச் செய்துள்ளார்கள். என தொடர்பு சாதனங்கள் ஊடாகவும் ஆனத்திலுமே செய்திகள் வெளிவந்துள்ளன. ஆனால் தீவிரவாத இயக்கம் எதுவும் இக்கொலைக்குத் தாங்கள் தாம் பொறுப்பு என நாம் இதை எழுதிமுடிக்கும்வரை அறிவித்தல் விடவில்லை

பௌத்த பிக்குகள் பிரசார வேலைகளில் ஈடுபட்டுவருவது ஒன்றும் புதிய விடயமல்ல. ஜப்பானிய பிக்குகளைப் பொறுத்தவரை சமீப காலத்திலேயே அவர்கள் வடபகுதிக்கு வர ஆரம்பித்தார்கள்.

இலங்கை சர்வோதய இயக்கத்தினர் காலியிலிருந்து நாடு தழுவிய அமைதிப் பாதயாத்திரை ஒன்றை ஆரம்பித்த சமயத்தில் ஜனாதிபதி திரு.ஜே. ஆர்.ஜயவர்தன தலையிட்டு அதனை நிறுத்திவிட்டதையடுத்து ஜப்பானிய பிக்குகள் யாழ்ப்பாணம் வந்தார்கள்.

''எமது அமைதிப் பிரயாணத்தை எவரும் தடுத்து நிறுத்தமுடியாது. நாங்கள் தொடர்ந்துநடத்துவோம்'' என அவர்கள் இங்கு அறிவித்தனர்.

யாழ்ப்பாணம் முனியப்பர் ஆலயத்திலிருந்து நகரின் பிரதான வீதிகள் வழியாக ஒரு அமைதி யாத்திரையையும் அவர்கள் நடத்தினார்கள்.

இங்கு சமாதான தூபி ஒன்றை அமைக்கவும் திட்டமிட்டிருப்பதாக அவர்கள் அறிவித்தனர். பின்னர் வண. இசித்தானி என்ற ஜப்பானிய பிக்குமாத்திரம் இங்கு தங்கியிருக்கப்போவதாகவும் ஏனையவர்கள்வேறு பகுதிகளுக்குச் செல்வதாகவும் அறிவித்தார்கள்.

வண. இசித்தானி ஒரு சில மாதங்களுக்கு முன் இளைஞர் சிலரால் வளைக்கப்பட்டு பிரச்னைக்குள்ளானார். இவர்பற்றிய பல செய்திகள் பொது மக்கள் மத்தியில் அடிபட்டன.

அந்தச் சம்பவத்தில் இளைஞர்களை எதிர்த்து வண. இசித்தானி சண்டையிட்டதாகவும் தாக்குப் பிடிக்க முடியாமல் இளைஞர்கள் ஓட்டம் பிடித்ததாகவும் வானொலியும், தொலைக்காட்சியும், கொழும்புப் பத்திரிகைகளும் செய்திகள் வெளியிட்டன.

ஆனால் வண. இசித்தானி 'ஈழநாடு' நிருபருக்களித்த பேட்டியில் தாம் இளைஞர்களை எதிர்த்துப் போராடவில்லையென்றும், தம்மிடம் சந்தேகப்படும்படியான பொருள் எதுவும் இருக்கவில்லையென்றும், இளைஞர்கள் தமது பையைச் சோதனையிட்டபின் திருப்பித் தந்துவிட்டார்களென்றும் கூறினார். தம்மை அமெரிக்க உளவாளியென்று சிலர் கூறுவதாக அறிந்து வேதனைப்படுவதாகக் கூறிய வண. இசித்தானி தமது நோக்கம் அமைதிப் பிரசாரம்தான் என்றும், உளவு புரிவது தமது வேலையல்லவென்றும் கூறினார்.

அண்மையில் டோக்கியோவில் இடம்பெற்ற இந்த பிக்குகளின் குருவான வண பூஜீயின் 100 ஆண்டு நிறைவின் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்காக வண இசித்தானியும் இலங்கையிலிருந்த ஏனைய ஜப்பானிய பிக்குகளும் சென்றிருந்தனர். இசித்தானியைத் தவிர ஏனைய அனைவரும் அங்கிருந்து லண்டனில் நடந்த அணு ஆயுத எதிர்ப்பு அமைதி ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்றனர். இசித்தானி மாத்திரம் குருவின் கட்டளையின்பேரில் நேரே யாழ்ப்பாணம் வந்தார்.

தமது குருதேவர் தம்மை யாழ்ப்பாணம் சென்று அமைதிப் பணியில் தொடர்ந்து ஈடுபடும்படியும், அதில் மரணம் ஏற்பட்டாலும் பாதகமில்லையென்று கூறியதாகவும் இவர் இங்கு கூறினார். யாழ் முனியப்பர்கோவிலடியில் தங்கியிருப்பதாகவும் அவர் கூறிவந்தார்.

அண்மையில் வேறொரு ஜப்பானிய பிக்கு இங்கு வருகைதந்தார். அதே சமயம் வண. இசித்தானி வேறு எங்கோ சென்றுவிட்டதாகத் தெரிகின்றது.

இப்பொழுது மரணமாகியுள்ள பிக்கு இசித்தானியா அல்லது புதிதாக இங்கு காணப்பட்ட பிக்குவா என்பது சரியாகத் தெரியவில்லை.

கொழும்புப் பத்திரிகைகளின்படி வண. யோக்காட்சுக்கா என்பவரே மரணமாகியுள்ளார்.

எது எவ்வாறுயினும் ஜப்பானிய பௌத்த பிக்கு ஒருவர் தமிழ் மக்களின் தலைநகராகக் கருதப்படும் யாழ்ப்பாணத்தில் சுட்டுச் கொல்லப்பட்டுள்ளார் என்ற உண்மையை யாரும் மறைப்பதற்கில்லை.

இக்கொலையை பௌத்த, கிறிஸ்தவத் தலைவர்களும் மற்றும் பலரும் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

கொலையென்றால் கொலைதான்!

அது வடக்கு அல்லது கிழக்கில் நடந்தால் என்ன, தெற்கில் நடந்தாலென்ன. மனித உயிர்கள் ஈவிரக்கமற்ற முறையில் சொலை செய்யப்படுவதை சமூக நீதியையும், மனித உரிமையையும் பெரிதாகப் போற்றுபவர்கள் கண்டிக்கவே செய்வார்கள். அந்த வரிசையில் நாமும் நிற்கின்றோம்.

ஜப்பானிய பிக்கு ஒரு மனித உயிர் என்பதற்காக மாத்திரமல்ல; அவர் உலகம் ஏற்றுக்கொண்ட ஒரு சமயத்தின் சின்னம். சமய நம்பிக்கைகளில் ஊறிப்போன தமிழ் மக்கள் இப்படியான ஒரு நிகழ்ச்சியை வரவேற்பார்கள் என எதிர்பார்க்க முடியாது.

எவ்வாறுயினும் இந்த மரணத்தின் பின்னணியிலுள்ள மர்மம் விரைவில் அம்பலப் படுத்தப்படுமானால் வீணை வதந்திகள் நீங்குவதற்கு உதவியாயிருக்குமென்று கருதலாம்.

# சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனம்

(சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபனத்தின் புதிய அலுவலகம் கொழும்பில் இன்று திறந்துவைக்கப் படுவதையொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.)

உலகில் சமூக நீதி நிலைபெற்று மக்களின் வாழ்க்கைத் தரம் உன்னத நிலையை அடைவதற்கு அரசாங்கங்கள்,—தொழில்கொள்வோர்--தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து உழைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் 1919-ம் ஆண்டு சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனம் (ILO) உருவாக்கப்பட்டது.

**இ. கந்தசாமி**

மக்களின் சமூக-பொருளாதார மேம்பாடு, சிறந்த வாழ்க்கைத்தரம், திருப்திகரமான வேலை—சம்பளம், போதிய வேலைவாய்ப்பு ஆகியன இன்றேல் உலகில் உண்மையில் சமாதானமும் நிலைபெற முடியாது என்ற ஆணித்தரமான குறிக்கோளுடன் இயங்கிவரும் இந்த ஸ்தாபனம் உலகெங்கும் பரந்து வாழும் தொழிலாளர்களின் சமூக நீதிக்காக கடந்த 60 ஆண்டுகளாக அரும் பாடுபட்டு வருகிறது.

19-ம் நூற்றுண்டிலேயே இந்த ஸ்தாபனத்திற்கு வித்திடப்பட்டு தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம், வேலைநேரம் ஆகியவை குறித்து ஆராய்வதற்காக 1890-ம் ஆண்டு பெர்லினில் 14 நாடுகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் கலந்துகொண்ட முதலாவது சர்வதேச மகாநாடு நடைபெற்றது.

எனினும் முதலாம் உலகப் போருக்கு பின்னரே இன்று ஐக்கிய நாடுகளுடன் இணைந்த மாபெரும் உலக நிறுவனமாக விளங்கும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்திற்கு அத்திவாரமிடப்பட்டது.

### முதலாவது சர்வதேச மாநாடு

இதன் முதலாவது சர்வதேச மகாநாடு 1919ம் ஆண்டு அக்டோபரில் பிரான்ஸைச்சேர்ந்த அல்பேர்ட் தோமஸ் தலைமையில் வாஷிங்டனில் இடம் பெற்றது.

8மணித்தியால வேலை, பெண் ஊழியர்களின் பிரசவ பாதுகாப்பு, இளம்பிள்ளைகளினதும் பெண்களினதும் வேலையின் நிலை, வேலையில்லாததிண்டாட்டம் ஆகியவை தொடர்பான முடிவுகளை இந் நிலையிலும் அவசர அவசரமாக முதலில் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

42 நாடுகளுடன் 1919ல் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் இன்று பெருவிருட்சமாகி 150 நாடுகளுடன் சாதனைகளை நிலைநாட்டிக் கொண்டு நிமிர்ந்து நிற்கிறது.

உலக நாடுகளில் வாழும் தொழிலாளர்கள் இன்று அனுபவித்துவரும் உரிமைகள் இந்த ஸ்தாபனத்தின் செயற்பாட்டின் பலா பலன்களே கொழும்பில் புதிய அலுவலகம்.

தொழிலாளர்களின் தொழில் நிலை, வாழ்க்கை நிலை ஆகியவற்றை உயர்த்துவதற்காக திட்டங்களையும், கொள்கைகளையும் வகுப்பதன் மூலம் தொழிலாளர்களின் அடிப்படை மனித உரிமைகளை நிலை நிறுத்தும் பணியிலும் ஈடுபட்டுவரும் இந்த ஸ்தாபனத்தின் அலுவலகம் ஒன்று இன்று கொழும்பில் திறந்து வைக்கப்படுகிறது.

கொழும்பு புல்லர்ஸ் வீதியில் உள்ள ஐ.நா. அபிவிருத்தி திட்ட அலுவலகத்திலேயே இந்த புதியஅலுவலகம் திறந்து வைக்கப்படுகிறது.

ஆசிய,பசுபிக் பிராந்தியத்தில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பணிக்கு பொறுப்பாக உள்ள உதவி இயக்குனர் நாயகம் திரு. ஷிகெரு நாகரனியும் தொழில் அமைச்சர் காப்டன் சி.பி.ஜே செனிவிரத்னவும் இவ் வைபவத்தில் விசேட விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

இலங்கை அலுவலகத்தின் இயக்குநராக கனடாவைச் சேர்ந்த திரு. ஸ்டான்லி டெயிலர் பதவி வகிப்பார்.

ஜெனிவாவில் தலைமையகத்தைக் கொண்டுள்ள சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்துடன் இது கால வரை புதுடில்லியிலுள்ள இதன் அலுவலகத்தினூடாகபாங் கொங்கில் உள்ள பிராந்திய அலுவலகத்தின் மூலமே நாம் தொடர்பு கொள்ள வேண்டி இருந்தது. புதிய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதும் பாங் கொங்கில் உள்ள பிராந்திய அலுவலகத்தின் ஊடாக தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது என தொழில் அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறினார்.

# பள்ளத்தை நாடும் பிலிப்பைன்ஸ்

எத்தனை மாதங்கள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கஸ் பேர்டினன்ட் பதவியில் தொடர்வார் என்ற சந்தேகமே நாட்டின் தலைநகரான மணிலாவில் இன்று அடிபடும் பேச்சு.

அதன் ஆப்த நண்பன் அமெரிக்காவின் உதவிக்கரம் எவ்வளவிற்கு விரைகின்றதோ அவ்வளவு விரைவில் மார்க்கஸ் ஆட்சி மண்கவ்வுமென்றும் கருதப்படுகிறது.

நிக்கரகுவாவில் நடந்ததும் இதுவே. மக்களின் வெறுப்பைச் சம்பாதித்து ஈடாடும் ஆட்சிக்கு ஜனநாயகப்போர்வையில் அமெரிக்க உதவிக்கு விரைவது இன்று உலகறிந்த அரசியல் சூழ்ச்சி.

**அனந்த்**

எதிர்க்கட்சித்தலைவர் அக்குனோகொலை செய்யப்பட்டதை அடுத்து ஒருமுழுவருடம் அரசியல் பொருளாதார கொந்தளிப்பு வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

கார்கள் நிறுத்தப்பட்ட இடமெல்லாம் குழந்தைகள் பிச்சைகேட்பதும் ஆடம்பர இறக்குமதிப்பொருட்கள் (LV) என்று நிறுத்தப்பட்டதும் விவசாயத்துக்கு அவசியமான உரம் வேண்ட நிதியில்லாமையும், அதன் விளைவாக அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் இன்றைய பிலிப்பைன்சின் முதல் வரிசை இன்னல்கள்.

இவ்வருடத்தில் 3 லட்சம் தொழிலாளிகள் வேலை இழந்திருக்கின்றனர் கடன் உதவி வழங்கும் சர்வதேச நாணய நிதி 63 கோடி டொலர் கடன் வழங்கக்கடும் நிபந்தனைகளை விதித்திருக்கிறது. சிக்கனமான வாழ்வை அமுல் படுத்தினாலன்றி நிதி வழங்கப் பட மாட்டதென்று அச்சுறுத்தல் விட்டிருக்கிறது.

இதுகாறுமே கடனில் வாழ்ந்து கடனில் திளைத்த மார்க்கஸ் ஆட்சி மக்கள் தேவைகளை மட்டுப்படுத்தி ஒரு 'கடும்பிடி' சீர்திருத்தத்தை துணிவுடன் செய்யுமா என்பது சந்தேகம்.

எல்லாவித கடன் வசதிகளும் காய்ந்துமடிந்து விட்டன. கிடைக்கும் நிதிஉதவி கடன் தொகையான 26 பில்லியன் டொல்லரின் அரைவாசிக்குரிய வட்டியைக் கட்டுவதில் சிதறிப் போமென 'பெசோ' என்ற பிலிப்பைன் நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டிருக்கிறது.

பண வீக்கம் 60 சதவீதம் இவற்றையெல்லாம் சீர்செய்ய சிக்கன வாழ்வை கண்டிப்பாக கடைப்பிடிக்க பிலிப்பைன்ஸ் ஆட்சிக்கு தக்க அரசியல் பலம் இன்று உண்டா? இது முக்கிய கேள்வி.

எதிர்க்கட்சித் தலைவர் அக்கினோவின் கொலையை விசாரணை செய்த கமிஷன் தனது அறிக்கையில் மார்க்கஸ் ஆட்சியை கண்டித்திருப்பதால் ஆட்சியின் முதுகெலும்பு பாதிக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன,

கத்தோலிக்க திருச்சபையும் மத்திய வர்க்க மக்களும் மார்க்கசுக்கு எதிராக இயங்கத் தொடங்கி விட்டன. இவர்களைத் தடுத்து நிறுத்த மார்க்கஸ் முயல்கிறார், முடியாதகாரியம்.

நாட்டில் நிலவும் ஊழலும் லஞ்சமும் நாட்டின் செல்வத்தை உறிஞ்சி வருகின்றன. இதனைத்தடுக்கும் நடவடிக்கைகளைத் துணிவாக எடுக்க முடியுமானால் அவருடைய தள்ளாடும் ஆட்சி உயிர் தப்ப இடமுண்டு என்று நினைப்பவர்களும் உண்டு.

அக்கினோ கொலையில் ராணுவத் தளபதி பேபியன் வெர் தொடர்புடையவரென்று நம்பப்படுவதால் அவரை ஏற்கனவே வெளியேற்ற மார்க்கசுக்கு வேண்டிய ஆதரவு அளித்திருக்க வேண்டுமென ஆட்சி ஆதரவாளர்கள் இன்று கண்ணீர் விடுகின்றனர்.

நிர்வாகத்தில் ஊழல் மலிந்திருப்பதால் அதனைத் துப்பரவு செய்து கண்டிப்பான ஆட்சிக்கு வித்திடுதல் அவசரமென்பதே பக்கம் சாரா மக்களின் அபிப்பிராயம்.

சீனிக்கும் தேங்காய்க்கும் ஏகபோக உரிமை கொடுத்திருப்பதால் அவற்றை அகற்றி பொதுமக்கள் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும்,

ஜனதிபதி தாம் நினைத்த திருத்தங்கள் கொண்டுவரலாமென்ற சட்டமாற்றம் அவருடைய சர்வாதிகாரபோக்குக்கு தூபமிடும். அதனைஅகற்ற வேண்டுமென்பது வர்த்தக தலைவர்களின் முக்கிய கோரிக்கை.

வருகிற வருடத்தில் பெரும் மாற்றம்ஏற்படப் போவதில்லை அமெரிக்க உதவி அற்புதம் செய்யாது.

20,000 ஆர்ப்பாட்டக்காரர் தெருவீதிகளில் காணப்படுவது ஜனாதிபதிக்கு ஒரு பெருஞ் சவால்.

அரசியலும் பொருளாதாரமும் ஒன்றுக்கொன்று உதவியாக தீவிர மாற்றங் கொண்டு வருவதே தப்பும் வழி.

ஆதாரம் நியுஸ் வீக்

# 'நவஜீவனம்' தந்த நல்லவர்

வட இலங்கையில் வாழ வழியிழந்தோரின் வாழ்விடம் நவ ஜீவனம். அனுதைகள், அகதிகள், ஏழைகள், வலு விழந்தோர், வயோதிபர் அனைவருக்கும் புதுவாழ்வு தருமிடம் நவஜீவனம். அதன் ஸ்தாபகர்அமரர் வண. தம்பி ராஜா போதகர். அன்னரின் சிராத்ததினம் நவம்பர் முதற் திகதி. சகல பரிசுத்த வான்களின் தூயதினம் இன்று. இந்நன்னாளில் இறைவனடி சேர்ந்த பக்தர் அவர். இன்று அவரை நினைவு கூருவோம்.

நல்ல கல்வியையும் நாகரீகத்தையும் நாடி எல்லோரும் பட்டணத்தை தேடி ஓடிய காலம் அது. சுமார் 27 ஆண்டுகளுக்கு முன் பட்டணத்தை விட்டு அருள் அம்மாவோடும் ஐந்து புதல்வர்களோடும் முரசு மோட்டை என்ற குட்டிக் கிராமத்தில் குடியிருக்க வந் வந்தார். கூட வந்தவர் 'சைக்கிள் அம்மா' என்ற எலிசபெத் பேக்கர் அம்மையார். அன்று பாம்பும் நுளம்பும் பற்றையும் நிறைந்த பரந்தன் காடு அவரது முயற்சியால், திட்டத்தால், அமலன் அருளால் இன்று புதுவாழ்வுப் பூங்காவாக ஈழநாட்டின் எழில் மிகு குடியிருப்பு வளாகமாக மாறியுள்ளது.

நவ ஜீவனத்தை அதன் வளர்ச்சியை, தொழில் முயற்சியைஅறிந்து தொண்டையும் சேவையையும் கண்டு மகிழ அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மன், பிரான்ஸ், ஜப்பான், மலேசியா நாடுகளிலிருந்து நல்லறிஞர்களும், வள்ளல்களும் வந்து போவதை பெரும் நிதி தந்து போவதையும் நாமறிவோம். கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பது நவ ஜீவனம். கரைச்சி மண்ணில் மலர்ந்த புண்ணிய ஸ்தலம். இயேசு ஊழியம் கோவிலுக்குள் மட்டுமல்ல. இக்கிராமத்திலும் தேவை என்று வாழ்ந்தவர் போதகர். கிராம மக்கள் தங்கள் தலைவராக அவரை ஏற்றுக்கொண்டனர். கமக்காரரின் தலைமகனுனர். ஏழை விவசாயிகளின் ஏக்கத்தை எடுத்தியம்பும் எக்காளத் தொனியாக விளங்கினுர் சமத்துவத்தை, பொது உடமையை நவ ஜீவன வாழ்வில் காட்டினுர். அவர் பேச்சுக்கு மதிப்பு, செயலுக்குக் காத்திருப்பு. ஆம் அவர் முடிவுக்கு மக்கள் தலை சாய்த்தனர். முரசமோட்டையின் முடிசூடாமன்னனுக வாழ்ந்தார்.

எதிலும் புதுமையை மறுமலர்ச்சியைக் காண்பவ அவர் போக்கு. அனுதைக் குழந்தைகளை அமுதமலராக ஆண்டவனின் அருஞ் செல்வமாகக் கண்டவர் போதகர். வேலையற்ற வாலிபருக்குத் தொழிற் பயிற்சியால் சுய முயற்சி தேடிக் கொடுத்தார். படிக்க வசதியற்றோருக்கு உயர்கல்வியும் உத்தியோகமும் ஆக்கிக் கொடுத்த உத்தமர் அவர் சேவையால் ஆலமரமென வளர்ந்த நவ ஜீவனத்தில் அண்டி வாழ்வோர், தங்கி வாழ்வோர் ஆயிரக்கணக்கானேர். அதன் கிளைகள் காணன் கிராமமும் உழவனூரும். அவர் மக்கள் திருபாவும் குலமும் அவர் பணியை அருள் அம்மாவின் துணையோடும் பேக்கர் அம்மையாரின் ஆசியோடும் தொடர்ந்து புரிகின்றனர்.

வாழ்வில் மட்டுமல்ல சாவிலும் புரட்சிகரமான புதுமை கண்டு புரிந்தவர் போதகர் ''இறந்தபின் வெளிநாட்டுள்ள என் பிள்ளைகளுக்காக காத்திருக்க வேண்டாம். சாதாரண கமக்காரனைப்போல சரீரத்தை அலங்கரியாது டிராக்டரில் எரிகாட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டும். இறந்தபின் நடக்கும் அடக்க ஆராதனையில் என்னைப்பாராட்டி எவரும் பேசக்கூடாது. எனது சரீரத்தை இப்படி வழமைப்படி எரிக்கவேண்டும். நான் ஒரு கமக்காரன் எனவே எனது அஸ்தியை இரணைமடுக் குளத்தில் தூவுங்கள் என்று கூறினுர் அதனுல்இன்று கரைச்சிப் பிரதேச கழனிகளின் மண்ணேடு இரண்டறக் கலந்து வாழும் சரித்திர நாயகர் அவர் நவ ஜீவனத்தின் தந்தையாகஅல்ல நாட்டின்தந்தையாகநல்லவ ஸ்தாபனங்களின் முதல்வராக, ஏழைகளின் வழி காட்டியாக நிறைந்த வாழ்வு வாழ்ந்த நிறைவச் சாதனைகள் புரிந்த நல்லவர் நமது போதகர். அவர் நாமம் வாழ்க!

ஏ. கே. ராசேந்திரம்

## யாழ்ப்பாணம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளாரினர்.

இச்செய்தியைக் கேட்ட மக்கள்சோகமே உருவாககாணப் பட்டனர் வியாபார நிலையங்கள் மூடப்பட்டன. சில வர்த்தக நிலயங்கள் அரைக்கதவில் காணப்பட்டன. கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டன.

## அமிர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் நாயகம் திரு அ அமிர்தலிங்கம் நேற்று விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

''திருமதி இந்திரா காந்தி, மனித இனத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்காக உரிமைக்குரல் கொடுத்துப் போராடியவர். இலங்கை வாழ் தமிழ் மக்கள் தமது இருள் சூழ்ந்த காலத்தில் அநாதையாகிவிட்டதை அவர் உணர்ந்து செயல்பட்டார்.

''பிறந்தநாள் முதல் ஓய்வின்றிதமது நாட்டுக்கும் மக்களுக்குமாகஉழைத்த ஒப்புயர்வு பெற்ற அந்த புனித ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேம்'' என்று தமது செய்தியில் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

## பிரார்த்தனை

(மாவிட்டபுரம்)

தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் நலம் தேறி தொடர்ந்து தமிழ் மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்று கோரி காங்கேசன் துறை கலாரசிகர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

காங்கேசன் துறை அண்ணமார் கோவில் முன்றலில் கோவில் முகாமையாளர் தி. மயில்வாகனம் தலைமையில் ஒரு நாள் பூராகவும் இப்பிரார்த்தனை நடைபெற்றது


கிளிநொச்சியில்

**மின் ஒட்டுப்பயிற்சிநெறி பதவி வெற்றிடங்கள்**

(அகதிகள் புனர் வாழ்வுத் திட்டம்)

போதனுசிரியர் அன்ட் பாதுகாவலர்

(INSTRUCTOR and CARE TAKER)

வேதனம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். நேர்முகப்பரீட்சை 12-11-84 திங்கள் காலை 9-30 மணிக்கு யாழ். செயலக அத்தியாவசிய சேவைத்திணைக்கள அலுவலகத்தில் நடைபெறும். சான்றிதழ்களுடன் நேரில் வருக. விபரங்களுடன் 10-11-84க்கு முன் விண்ணப்பிக்கவும்.

தகைமை: அங்கீகரிக்கப்பட்ட மின்னெட்டுப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பூர்த்தி செய்த சான்றிதழுடன் 5 வருட மின்னெட்டு, வாயு ஒட்டு அனுபவம்.

வயது 30 — 50

பயிற்சி இயக்குனர், கி. ப. றேட்டரிக்கழகம். பரந்தன்.

(520)


## சேதி கேட்டுப் பாரதம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தது. திரு ரஜீவ் காந்தி புதுடில்லி வந்துசேருமுன்னரே அவரை காங்கிரஸ் பாராளுமன்றக்குழு பிரதமராகத் தேர்ந்தெடுத்த அதேநேரத்தில்; உள்துறை அமைச்சர் திரு.பி வி.நரசிம்மராவ் மற்றும் இந்திரா அரசாங்கத்தில் அமைச்சர்களாகவருந்த திரு. சிவசங்கர், திரு. புட்டோ சிங், திரு. பிரணுப் முகர்ஜி ஆகியோர் ரஜீவ் காந்தியின் அமைச்சரவையில் புதிய அமைச்சர்களாக நேற்று மாலை நியமனம் பெற்றுள்ளனர்.

திரு. ரஜீவ், புதிய பிரதமராக நேற்று மாலை பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

## பன்னிரண்டு நாள் துக்கதினம்

திருமதி இந்திரா காந்தியின் மறைவுக்கு, பாரதத்தில் பன்னிரண்டு தினங்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும். சகல மாநிலங்களிலும் அரசு மற்றும் பொதுவிழாக்கள் வைபவங்கள் ரத்துச்செய்யப்பட்டு தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும்.

# "காவியத் தலைவிக்கு கண்ணீர் நமது காணிக்கை"

## 'சிவா' அனுதாபச் செய்தி

(கொழும்பு)

'பாரதத்தின் தலைசிறந்த தலைவர் அகால மரணமெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம்'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரின் மறைவு இந்திய மக்களுக்கு மட்டுமல்ல உலகில் சுதந்திரத்தை அடைய விரும்பும் சகல மக்களுக்கும் பேரிழப்பாகுமென்றும் அவர் தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''அணிசேரா தலைவியாக ஒதுக்கப்பட்ட, சுதந்திரம் மறுக்கப்பட்ட மக்களுக்கு ஒளிவிளக்காகத் திகழ்ந்த ஒரு காவியத்தலைவி மறைந்துவிட்டது அதிர்ச்சிக்குரியது.

''ஈழத் தமிழ் மக்களின் உள்ளங்களில் நீங்காத இடத்தைப்பெற்றுவிட்ட திருமதி காந்தி, இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைக்கு நிரந்தரத்தீர்வுகாண அயராது உழைத்துவந்தார். அவருக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றேம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பிலும் ஈழத்தமிழர் சார்பிலும் இந்திய அரசுக்கும் மக்களுக்கும், ராஜீவ் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த கவலையைத்தெரிவித்துக்கொள்கிறேம்.''

# ஹக், றீகன் உடனடி அனுதாபம்

(புதுடில்லி)

திருமதி காந்தி சுடப்பட்ட செய்தி வெளியானதும் அதிர்ச்சியும், கவலையும் தெரிவித்து செய்தி வெளியிட்ட முதலாவது வெளிநாட்டுத் தலைவர் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக் ஆவார்.

அமெரிக்க ஜனதிபதி திரு றெனல்ட் றீகன் இச்செய்தி கேட்டதும் மறுகணமே தமது தனிப்பட்ட அனுதாபத்தை விரைந்து அனுப்பினர். உத்தியோகபூர்வமான செய்தியைச் சற்று நேரத்தின் பின்னர் அனுப்பிவைத்தார்.

இது தவிர பல உலகத் தலைவர்களின்அனுதாபச்செய்திகள் தற்போது புதுடில்லி வந்து குவிந்தவண்ண மிருக்கின்றன.

(கி)

# உலகத் தலைவர்கள் அதிர்ச்சியும் கவலையும்

(புதுடில்லி)

பாரதப் பிரதமர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை சோவியத்யூனியன் பலமாகக் கண்டித்துள்ளது

சோவியத் மக்கள் இந்தச் செய்தியால் ஆழுத்துயரில் ஆழ்ந்துள்ளனர் என்றும் சோவியத்யூனியன் தனது உத்தியோகபூர்வமான செய்தியில் தெரிவித்தது. சோவியத் வானெலியும் தனது வழமையான செய்திகளை நிறுத்தி விட்டு அஞ்சலி செலுத்தியது.

அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகன் ஆழ்ந்த அனுதபாபத்தை தமது சொந்த முறையில் தெரிவித்தார். விரைவில் உத்தியோக பூர்வ அறிக்கை வெளியிடப்படும் என்றும் அவர் கூறினுர்.

மிகச்சிறந்ததலைவர் ஒருவரை உலகம் இழந்துவிட்டது என்று பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் தனது செய்தியில் தெரிவித்தார்.

பொதுநல அமைப்பு நாடுகள் நல்லதொரு தலைவரை இழந்து விட்டது என்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர்சின்னப்பரும்பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

## இந்திராவின் கனவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மல்ல இந்த நாட்டிலுள்ள அனைவரதும் அன்னை அவர். நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாடு, அபிவிருத்தி இவை தான் அவர் கண்ட கனவு. எந்தக் கட்டத்திலும் நாடு பிளவுபடக்கூடாது என்பதே அவரது லட்கியம். அவரது கனவை நனவாக்குவோம்.

''திருமதி காந்தி இன்று எம் மத்தியில் இல்லாவிட்டாலும் அவரது உயர்ந்த லட்சியங்கள் என்றென்றும் வாழும்''.

## இந்திராவின் அர .

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடு, காமன்வெல்த் மாநாடு, ஆகிய விளையாட்டுப் போட்டி என்பவற்றையும் வெற்றிகரமாக நடத்திமுடித்தார்.

## காலையில்நடந்த சம்பவம்

(புதுடில்லி)

புதுடில்லியிலுள்ள 'சர்ஜ் ஜார்ஜங்' வாசஸ்தலத்திலிருந்து அருகிலுள்ள தமது அலுவலகத்திற்கு, தமது வழக்கமான மெய்பாதுகாவலர்களுடன் நேற்றுக் காலை 9-30 மணியளவில திருமதி காந்தி புறப்பட்டார்.

வாசஸ்தலத்திலிருந்து மிக அண்மையிலுள்ள அவரது அலுவலகத்துக்கு வழக்கம் போலவே நடந்துசென்று கொண்டிருந்தபோது 9-40 மணியளவில் திடீரென துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

திருமதி இந்திரா காந்தியின் வயிற்றிலும் மார்பிலும் துப்பாக்கிச்சூடுகள் பாய்ந்தன.

திருமதி காந்தியின் மெய்ப்பாதுகாவலர்களில் இருவரே அவரைச் சுட்டதாகவும் ஏனைய காவலாளர்கள் திருப்பிச்சுட்டதில் இரு காவலர்கள் கொலையுண்டதாகவும், இருவர் கைதுசெய்யப்பட்டதாகவும் முன்னர் வந்த செய்தி ஒன்று தெரிவித்தது. பிந்திக் கிடைத்த செய்திகளின் படி; ஒருவர் சரணடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

திருமதி காந்தியைச் சுட்டவர்கள் எவ்வாறு சுட்டனர். என்பது தெரியவில்லை என்றும் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானதாகவும் மற்றவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானுர் எனவும் மாறுபட்ட செய்திகள் வெளிவந்துள்ளன.

சுடப்பட்ட ஒருபத்து நிமிடங்களின் பின்னர் திருமதி காந்தி அருகிலுள்ள அகில இந்திய மருத்துவக் கழக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவருக்கு அவசர சத்திர சிகிச்சைகள் செய்யப்பட்டபோதிலும் அவரது உயிரைக்காப்பாற்றமுடியவில்லை. சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட அதே நேரத்தில்.....இந்திராவின் ஆவி பிரிந்துவிட்டது.

## அமிர் சிவா ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு எம் சிவசிதம்பரம், செயலதிபர் திரு அ அமிர்தலிங்கம் ஆகியோர் நாளை புதுடில்லி செல்லவுள்ளனர்.

## அரச தரப்பில் ஜே. ஆர், காமினி

இலங்கை அரசின் சார்பில் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக ஜனதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்காவும் புதுடில்லி செல்லவுள்ளனர்.

## துக்க அனுஷ்டானம்

இறுதிச் சடங்குகள் முடியும் வரை துக்கம்அனுஷ்டிப்பதென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும்.

## எதுவும் புரியவில்லை

அன்னையே! குலவிளக்கே!
ஈழமதின் இன்னலில் ஈருடல்போல் நின்றிட்ட
இன்னமுதே; அன்னையே—உனது
உணர்வுகளை உணராத
காலனவன்
எட்டுக் குண்டுகளால் உன்
இனிய உயிர்தனை தன்னகத்தே
உரிமையாய் கொண்டானே, அம்மா!
என்னுல் எதுவுமே சொல்ல முடியவில்லை!
கவிதைக்கு எதுகைமோனை பார்த்தேன்:
அதுவும் புரியவில்லை—அம்மா
அழகு தமிழ் நடைக்கு வசனம்.
அதுவும் தெரியவில்லை;
உன்முகம் என்கண்ணில் நிற்கும்போது
எனக்கு எதுவுமே புரியவில்லை.

—யாழூர் துரை

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் — இ. கந்தசாமி

# இனப் பிரச்னை என்றோ தீர்க்கப்பட்டிருக்கவேண்டும்

(நேற்றைய தொடர்ச்சி)

எல்லோரையும்விட உரத்த குரலில் தினேஷ் தொடர்ந்து கூறியதாவது:

அவசரகாலச்சட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளை அரசு மூடியுள்ளது. துப்பாக்கிமுனையில் பல தொழிலாளர்கள் வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் வேலைநிறுத்தத்துக்கு தடைபோட்டு பல தொழிலாளர்களை நடுத்தெருவில் நிறுத்திவிட்டீர்கள் அவர்களில் 24 பேர் எதுவுமே செய்ய முடியாத நிலையில் தற்கொலை கூடச் செய்துள்ளனர்.

ஆனால் தொண்டமானின் தொழிற் சங்கம் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தும் வேலைநிறுத்தம் செய்து வெற்றியும் அடைந்துள்ளது

மிலேச்சத்தனமாக, மிருகத்தனமாக மனிதாபிமானமற்ற விதத்தில் அரசு நடக்கிறது.

அரசுக்கு ஒழுக்கம் அவசியம். எதிர்க்கட்சிகளை நசுக்கிவிட்டு, அடக்கி ஒடுக்கிவிட்டு உங்களால் ஆட்சி நடத்தமுடியாது.

தேசியப் பிரச்னையான இனப் பிரச்னைபற்றி விவாதிக்கப்படும் விடயங்கள் மக்களுக்குத் தெரியாதவாறு தீவிர தணிக்கை அமுல் செய்யப்படுகிறது.

தேசியப் பிரச்னையில் தமது கருத்தை வெளியிட கட்சிகளின் முடிவை அறிய மக்களுக்கு வாய்ப்பு இல்லையா? உங்களது தீர்வை மக்களது தலையில் பலாத்காரமாக சுமத்தாதீர்கள். மக்களின் கருத்துப் பரிமாறல் இன்றி அவர்கள் மீது திணிக்கப்படும் தீர்வில் எதுவித பயனும் இல்லை.

தினேஷின் இக்குற்றச்சாட்டுக்குப் பதில் கூறுகிறார் லலித்—

இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். திரைமறைவில் ஒளிவுமறைவாக எதையும் செய்யமாட்டோம். ஒரு முடிவுக்கு வந்த பின் அம்முடிவை மக்கள்முன் வைத்து அவர்களின் அனுமதியைக் கோருவோம், இவ்வாறு பேசி அரசியல் லாபம்தேட வேண்டாம் என எதிர்கட்சியினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

சர்வதேச சட்டதிட்டங்களுக்கமையவே அரசு இஸ்ரேலுடனும், அமெரிக்காவுடனும் உறவு கொண்டுள்ளது என விளக்கமளித்தார்.

நடந்து முடிந்த இடைத் தேர்தல்களின் எதிரொலிப்பைப் பார்ப்போம்.

காலையில் சபையில் இல்லாத கம்யூனிஸ்ட் சரத் பிற்பகலில் லலித் உரையாற்றிக் கொண்டிருந்தபோது சபையில் நுழைந்த வேளை அரசதரப்பினரால் ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டார்.

அந்த ஆரவாரம் சரத் உரை நிகழ்த்த ஆரம்பித்ததும் கூச்சல், குழப்பம், அமளி துமளியாக உருவெடுத்தது.

மிகவும் நேர்மையான, நம்பிக்கையான அரசியல் வாதிகளுள் ஒருவரான சரத் இடைத்தேர்தலில் அரசு தரப்பினர் நடந்து கொண்ட விதம் குறித்து அவர்களைச் சாடுகிறார்.

## ‘சரத்’ உரை

மின்னேரியா இடைத்தேர்தலின் போது அரசு தரப்பு எம். பி. ஒருவர், துப்பாக்கியுடன் நடமாடியதாகக் குறிப்பிட்டபோதே குறுக்கீடும் கூக்குரலும்பலமாகியது. எனினும் அவர் தொடர்கிறார். கூக்குரல் தொடர்கிறது இடையில் அமைதியை நிலை நாட்டும் உப சபாநாயகரின் குரலும் ஒலிக்கிறது.

கூச்சல் அதிகரிக்க சரத்தும் உச்சஸ்தாயில் உரையாற்றுகிறார்.

எம். பி. ஒருவரின் நடத்தை குறித்து பேசுவதாக இருந்தால் தனியான பிரேரணை கொண்டு வந்தே பேசலாம் என லலித் ஒழுங்குப் பிரச்னை ஒன்றைக் கிளப்பினார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த செய்தியை வாசிக்கிறார் சரத்.

கூச்சல்நின்றபாடாக இல்லை.

அந்த அமளிதுமளிக்கான சரத்தின் கூற்றுகளில் சில-

மின்னேரியாவில் இருந்த வாக்களிப்புநிலையத்தில் பொலிசார் முன்னிலையிலேயே 40 சிறி 4045 இலக்கமுள்ள ‘பிக்கப்’ வாகனத்தில் வாக்காளர்களைக் கொண்டுவந்து இறக்கினார்கள். 31 சிறி 4067 இலக்கமுள்ள வாகனத்திலும் வாக்காளர்கள் அங்குகொண்டுவந்து இறக்கப்பட்டனர்.

ஒரு குரல்: இதுபற்றி பொலிசாருக்கு முறையிடலாமே?

சரத்: முறையிட்டேன். எமது புகாருக்கு எங்கே விசாரணை, வழக்கு இருக்கிறது?

வாகனங்களில் வாக்காளர்களைக் கொண்டு வந்து இறக்கியபோது மகர எம். பி.யும் பச்சை ஷேர்ட்டுடன் அங்கு நின்றிருந்தார். நானும் அவர் அருகே சென்று நின்றுகொண்டேன்.

அவ்விடத்தில்ஒரு சப் இன்ஸ்பெக்டரும் 3 கான்ஸ்டபிள்களும் காணப்பட்டனர். வாகனங்களில் வாக்காளர்கள் கொண்டுவந்து இறக்கப்படுவது குறித்து அவர்களிடம் புகார் செய்தேன். (அவர்கள் தாம் மகர எம்.பிக்கு பாதுகாப்பு அளிக்க மட்டுமே வந்துள்ளதாகக் கூறி எனது புகாரை ஏற்க மறுத்துவிட்டனர்.

இவ்வேளையில் குறுக்கிட்ட பிரதமர் இடைத்தேர்தல்பற்றி பேசுவதாக இருந்தால் தனியான பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தால் விவாதத்திற்கு அனுமதியளிக்கலாம் என்றார்.

இச்சமயம் சரத் உரையாற்ற ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டதாக உபசபாநாயகர் அறிவித்ததும் ஐயா நான் இதுவரை பேசவில்லை. அரசு தரப்பினர்தானே எனது நேரத்தில் (குறுக்கிட்டு) உரையாற்றினார்கள். உங்களுடன் எனக்கு மோதல் இல்லை. ஆனால்என்னை இவர்கள் (அரச தரப்பினர்) பேசவிடவில்லையே. நான்என்ன செய்வது என்கிறார் சரத்.

மீண்டும் குறுக்கீடு, கூச்சல்.

சபாநாயகரைப் பார்த்து ஐயா, பாருங்கள் எனது நேரத்தில் மீண்டும் 3 நிமிடங்கள் வீணாகிவிட்டது என்ற சரத் இவ்வாறுகூச்சல் அதிகரித்ததும் அமர்வதும் சத்தம் குறைந்ததும் எழுந்து பேசுவதுமாக

[7-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க]



தேசிய கசரோக தடுப்புச் சபையின் கிளிநொச்சி கரைச்சிக் கிளையினரின் கொடிதின வைபவத்தின்போது பிரஸ்தாப சங்கத்தின் தலைவரும், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஆளனி முகாமையாளருமான சட்டத்தரணி வி. ரி. சிவலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் என். ஜெயநாதனிற்கு முதல் கொடியை அணிவிப்பதை படத்தில் காண்க. படம்: கே. வி. கே. திருலோகமூர்த்தி.

## பொலிசாரே சோதனை

(பச்சிலைப்பள்ளி)

ஆனையிறவு தடை முகாமில் தற்போது பொலிசாரே வாகனங்களை சோதனையிட்டு வருகிறார்கள்.

கடந்த சில மாதங்களாக தடை முகாமில் இராணுவத்தினரே சோதனையிட்டு வந்தார்கள்.


லக்ஸ்பிறே நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து இறக்குமதியாகும் பால்மா.




நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து தருவிக்கப்பட்டு. எந்தக் கட்டத்திலும் எவர் கையும் படாமல் உங்களை நாடும் லக்ஸ்பிறே அதி நவீன இயந்திர சாதனங்களின் மூலம் அடைக்கப்படுகின்றது

லக்ஸ்பிறே கலப்பற்றதும், சுத்தமானதும் சுகாதாரமானதும் என்பது நிச்சயம்.

நாட்டின் எல்லாப்பாகங்களிலும் விற்கப்படும் லக்ஸ்பிறே எந்த இடத்திலும் ஒரே தரத்தில் உள்ளது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

இது ஒரு பொதுசன ஸ்தாபனம். இதன் பங்குதாரர்கள் இத்தீவின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏக விநியோகஸ்தர்கள்.

S. V. முருகேசு அன் சன்ஸ் 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சிற்றி மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.



நிர்வாக அதிகாரி லங்கா மில்க்ஃபுட்ஸ் (சி.டபிள்யூ.ஈ) லிமிட்டெட், வெலிசர.

லக்ஸ்பிறே-நாட்டு மக்களின் ஊட்டம் மிகுந்த பாலுணவு.

ZENITH

# "வேந்தனாரின் பாடல்களில் உங்கள் சொற்களைத் திணிக்காதீர்"

## நூல் வெளியீட்டு விழாவில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

''வேந்தனாரின் பாடல்களில் எதுவித மாற்றமும் செய்யாது பயன்படுத்த விரும்பினுல் பயன்படுத்துங்கள் ஆனுல் அவரின் கவிதைகளிலே உங்களின் கைவரிசைகளைத் திணிக்கும் வேலையில் இறங்க வேண்டாம். கல்வித் திணைக்களத் தமிழ்ப்பாட நூலிலே அவரது 'காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா' என்ற பாடலை மாற்றி மனம்போனவாறு சொற்களைத் திணித்து அவரின் பெயருக்குக் களங்கம் உண்டுபண்ணியது தமிழுக்கே செய்த பெருந்துரோகம். யாழ். இலக்கிய வட்டம் போன்ற சமூக இலக்கிய நிறுவனங்கள் இத்தகைய ஈனச் செய்கைகளைத் தட்டிக் கேட்டு நியாயத்தை நிலைநாட்ட முன் வருதல் அவசியமாகும்''.

இவ்வாறு வேந்தனாரின் புதல்வரும் ஜேர்மனியில் பொறியியல் கலாநிதி ஆய்வு நிகழ்த்தியவருமான திரு. இளங்கோ நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிகழ்ந்த சொக்கன் எழுதிய 'தமிழ்ப் பேரன்பர் வித்துவான் க. வேந்தனார்' நூல் வெளியீட்டு விழாவில் அறிமுகவுரை ஆற்றும் போது கூறினுர்.

யாழ். இலக்கிய வட்டம் ஒழுங்கு செய்திருந்த இவ் வெளியீட்டுவிழாவிற்கு இலக்கிய வட்டத் தலைவரான சசிபாரதி தலைமைதாங்கினுர்.

அரியாலையூர்க் கவிஞர் வே. ஐயாத்துரையின் தமிழ் வாழ்த்தைத் தொடர்ந்து தலைமையுரை நிகழ்த்திய சசிபாரதி வேந்தனார் தமிழ் மொழியின் ஆற்றலை உணர்ந்து அதன் தனித்தன்மையைப் போற்றிப் பாதுகாத்த பெரும் புலவர் தலைசிறந்த குழந்தைக் கவிஞர் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர் மறைந்தாலும் இன்றும் நாம் அவரை மறவாது நினைவு கூர்ந்து அன்னுர் பற்றிய நூலை எமது யாழ் இலக்கிய வட்டத்தின் வெளியீடாக வெளியிடுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேம்' என்றுர்.

திரு. செம்பியன் செல்வன் வெளியீட்டுரை நிகழ்த்துகையில் வேந்தனார் அவர்கள் இலக்கிய நிறுவனங்களோடு தொடர்பு கொள்ளாது தனித்து விலகியிருந்த போதிலும் அவரின் உயர்கவித்துவமும் உன்னதமான சமூக அரசியற் சிந்தனைகளும் ஈழத்துப் படைப்பாளிகளால் என்றும் நன்றியுடன் நினைவுகூரப் படவேண்டியனவே அன்னுர் பற்றிய நூலை நம்மிடையே வாழும் முதிர்ந்த எழுத்தாளரும் அறிஞருமான 'சொக்கன்' எழுதியுள்ளார். இவ்விருவரையும் ஒரு சேரக் கௌரவிக்கும் வகையில் எமது யாழ் இலக்கியவட்டம் இன்று இந்த நூலை மகிழ்ச்சியுடன் வெளியிட்டு வேந்தனுருக்கு அமைதியாகவும் அடக்கமாகவும் நினைவு விழாக் கொண்டாடுகின்றது என்றுர்.

நூல்பற்றி ஆய்வுரை நிகழ்த்திய பேராசிரியர் அ. சண்முகதாஸ் ''வேந்தனுர் என்ற ஈழத்துத் தமிழறிஞரின் பணிகளைப் பற்றிய பலதகவல்களைத் தரும் இந்நூல் எதிர்காலத்தில் அவர் பற்றி நுண்ணுய்வு நிகழ்த்த முற்படுவோர்க்கு நல்வழிகாட்டியாக அமையும். குழந்தைக்கவிதைத் துறையில் வேந்தனுரின் சாதனையை நன்முறையிலேயே சொக்கன் மதிப்பிட்டுள்ளார்'' என்று எடுத்துரைத்தார்.

''ஈழத்துத்தமிழராகிய நாம் இந்நாட்டிலே கடந்தகாலத்தில் என்னென்ன பணிகளைப் புரிந்துள்ளோம் நம்மவரின் சாதனைகள் என்ன என்பனவற்றை வங்கிப்படுத்துவது போலச் சேர்த்துத் தொகுத்து இன்றைய இளம் சந்ததியினருக்கும் எதிர்கால பரம்பரையினருக்கும் வழங்கவேண்டியது முதிய எழுத்தாளர்களாயுள்ள நமது இன்றியமையாக் கடமையாகும்: இந்தக் கடமையுணர்வும் வேந்தனுர் மீது நான் கொண்டிருந்த எல்லையற்ற மதிப்புமே இந்நூலை எழுதுமாறு என்னைத் தூண்டின என்று நூலாசிரியர் சொக்கன் தமது பதிலுரையிலே குறிப்பிட்டார்.

பயிலங்கூடலூர் பி. நடராசன் எஸ். சிவலிங்கராஜா ஆகியோரும் ஆய்வுரை நிகழ்த்தினர்.

## நாகர்கோவில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் 95 சதவீதமான மக்கள் இச் சேவையைப் பெறுகின்றுர்கள்'' என்று தெரிவித்தார்.

ஒரு கிலோவாட் சக்தி கொண்ட இந்த வானெலி நிலையம் 25 கிலோமீட்டர் சுற்றளவுக்கு ஒலிபரப்புச்செய்யும். தினமும் மாலை 6மணி தொடக்கம் 9 மணிவரை இந்நிலையத்தில் ஒலிபரப்பு இடம்பெறும். உள்ளூர்ச் செய்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும். இந்நிலையத்தில் மாலை 6-30 மாநிலச் செய்தியும், மாலை 7.15 இந்தியச் செய்தியும் ஒலிபரப்பப்படும்.

இந்தியாவில் ஐந்து புதிய வானெலி நிலையங்களை அமைக்கும் மத்திய அரசின் கொள்கையில் இதுமுதலாவதாக அமைக்கப்பட்டது.

## யாழ். லீக்கின்: 7 பேர் உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில், யாழ், மாவட்டக் விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்றுவரும் '7-பேர்' பங்குபற்றும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின், கடந்தவார முடிவுகள் வருமாறு:

### பொற்பதி வெற்றி

கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும், 'வைக்கிங்ஸ்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பொற்பதிக் கழகம் 4—0 கோல்களால் வெற்றி பெற்றது.

பொற்பதி கழகத்துக்கும் நாவாந்துறை சென் நீக்கிலஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் பொற்பதிக் கழகம் 2—1 கோல்களால் வெற்றி பெற்றது.

### சென். அன்ரனிஸ் வெற்றி

பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக 'பி' பிரிவுக்கும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், சென். அன்ரனிஸ் கழகம் 2—1 கோல்களால் வெற்றி பெற்றது.

### 'கிறீன்பீல்ட்' வெற்றி

யாழ். 'கிறீன்பீல்ட்' கழகத்துக்கும், பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக 'பி' பிரிவுக்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான போட்டியில் 'கிறீன்பீல்ட்' கழகம் 3—1 கோல்களால் வெற்றி பெற்றது.

### சென். நீக்கிலஸ் வெற்றி

நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழகத்துக்கும், தின்னவேலி வை. எம். எச். ஏ. கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சென். நீக்கிலஸ் கழகம் 5—1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிகள் அனைத்தும் அரியாலை ஐக்கிய சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியின் அரை-இறுதி, இறுதி ஆட்டங்கள் எதிர்வரும் சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறவுள்ளது. (வி)

## இன்றைய பலன்

மாதம்—ஐப்பசி
திகதி—16(01-11-1984)
வாரம்—வியாழன்
திதி—அட்டமி முற்பகல் 11-30ன் மேல் நவமி
நக்ஷத்திரம்— திருவோணம் பிற்பகல் 3-43வரை

மேடம்:- தடைப்பட்டகாரியங்கள் நல்லமுடிவுக்குவரும் தாய்வழி பெருமையுண்டு வாகன நலனுடன் வாழ்விலும் சுகம்காணும்.

இடபம்:- உள்ளம் இன்பத்தால் துள்ளும் நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கு இடமுண்டு பிள்ளை யொன்றின் கல்விமுன்னேற்றம் மகிழ்ச்சி தரும்.

மிதுனம்:- சிறிய விடயம் இன்று சிரமமாகத்தோன்றும் வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும் திருப்தியற்றதினம்.

கடகம்:- குடும்பவாழ்க்கை குதூகலம் நிரம்பியதாக இருக்கும் வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும் திடீர்பிரயாணத்திற்கு இடமுண்டு.

சிங்கம்:- ஆதரவு கொடுத்தவரே முதலில் கையைவிரிக்கக்கூடும் கடன்தொல்லை அதிகரிக்கலாம் நிதானம் வேண்டும்.

கன்னி:- பிதாவழி மூலம் மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கலாம் ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டுவீர்கள் பெரியவர்களின் ஆதரவு தவறுமல் கிடைக்கும்.

துலாம்:- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள் ஓவியர்கள் வாழ்க்கைஒளிமயமாகும் சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

விருச்சிகம்:- வருமானத்தில் அபிவிருத்தி காணப்படும் கடந்த சிலநாட்களாக நிலவிவந்த தயக்கநிலையில் இன்று நல்ல திருத்தம் ஏற்படும்.

தனுசு:- உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும் பணவிவகாரத்தின் மூலம் பகைதோன்றலாம் தொழில்துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

மகரம்:- அந்நியர்கள் மத்தியில் அதிகம் பழகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் வயிற்றுக்கோளாறுக்கும் இடமுண்டு உணவு விடயத்தில் கவனம் வேண்டும்.

கும்பம்:- பெரிய இடத்துச் சினேகிதம் இன்று ஏற்படலாம் புது வழிகளின் மூலம் பணம்கிடைக்கும் குடும்பத்திலும் மகிழ்சிக்கு இடமுண்டு.

மீனம்:- வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலமைதென்படும் சகோதரியின் உடல்நலம் பாதிக்கப்படும் பெண்கள் மிகவும் அவதானமாக இருக்கவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## இனப்பிரச்னை

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

இருந்தார்.

இனப்பிரச்னை தமிழ் சிங்கள மக்கள் பிரச்னையல்ல இது என்றே தீர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

கடந்த டிசம்பர், ஜனவரியில் இனப்பிரச்னை தீர்வுக்கான நல்லதொரு சூழ்நிலை வரப்பட்டது.

அரசு அச்சந்தர்ப்பத்தைத் தவறவிட்டுவிட்டது. இவ்விவகாரத்தைத் தள்ளிப்போட்டுக் கொண்டுவந்தமையினுல் நிலைமை மோசமாகிவிட்டது.

ஒரு இனத்தை என்றுமே அழிக்க முடியாது. இனப்பிரச்னை தொடர்பாக எடுக்கப்படும் நியாயமான தீர்வை சிங்கள மக்கள் எவருமே மறுக்கமாட்டார்கள் என்றும் ஆணித்தரமாகக் கூறினுர் சரத்.

இடைத்தேர்தல் குறித்து சிலர் தெரிவித்த குறிப்புகளைப் பார்ப்போம்:-

ரஞ்சித் அத்தபத்து; இரு இடைத் தேர்தல்களிலும் தோற்றுவிட்டார்கள் இங்கு வந்து பெரியதாகக் கதை அளக்கிறீர்கள்.

லக்ஷ்மன்; தேர்தலில் எப்படித்தான் தோல்வி ஏற்பட்டாலும் பயங்கரவாதத்தை அழிக்களத்துணை உதவியையும் வழங்க நாம் தயார்.

காமினி திசாநாயக்கா: மக்களைத் தோற்கடிக்க அனுராபோதி பூசையாற்றியுள்ளார். தேர்தலில் வெற்றிபெற யார் போதி பூஜை நடத்துவார்கள். போதி பூஜை நடத்துபவர்களுக்குப் பின் செல்ல மக்கள் அவ்வளவு மடையர்கள் அல்லர்.

தினேஷ்; இடைத்தேர்தல்களில் கிடைத்த வெற்றியை வைத்துக்கொண்டு தம்பட்டம் அடிக்காதீர்கள். இது உண்மையான ஜனநாயக வெற்றி அல்ல. துப்பாக்கியையும் பலாக்காரத்தையும், அதிகாரத்தையும் காட்டி பெற்ற வெற்றி அது.

பிரதமர்: இடைத் தேர்தல்களில் தோல்வியுற்றமைக்காக எதிர்க்கட்சித்தலைவர் வெட்கபடக் கூடாது. அவர் இங்கு துணிந்து வரலாம் அவர் சுதந்திரக் கட்சியின்விசுவாசி அல்ல. அவர் எமதுகட்சிக்கு சார்பானவர்.

இறுதியாகபேசிய பிரதமர் இந்த நாடுசகலருக்கும்சொந்தமானது இதனை துண்டாக்கி எவருக்கும் அடகு வைக்க அனுமதிக்கமாட்டோம் என உறுதிபடக் கூறினுர்.

மாதாந்த நிகழ்வான அவசரகால சட்டநீடிப்பு பிரேரணைக்கு அண்மைக் காலமாக எதிர்த்து வாக்களித்த சுதந்திரக் கட்சி இம் முறை நடுநிலை வகித்தது.

சரத்தும் தினேஷும் இம் முறையும் எதிர்த்தே வாக்களித்தனர்.

## வெற்றி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை கல்வி வட்டார பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட ஆங்கில 'தினப்' போட்டிகளில் பண்டத்தரிப்பு ஜசிந்தா றேமன் கத்தோலிக்க வித்தியாலயம் முக்கிய இடங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது,


சாந்தி (யாழ்நகர்)
31-10-84
10-30, 2-30
Harrison Ford in
''BLADE RUNNER''
Scope—Action—Color

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10.30, 2. 30, 6.30
சிவாஜி—மஞ்சுளா
அன்பே ஆருயிரே
(ஈஸ்மன்கலர்— புதியபிரதி)

ராணி (யாழ்ப்பாணம்)
சிவாஜியின்
நிச்சயதாம்பூலம்
தினசரி 3 காட்சிகள்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
தாயில்லாமல் நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்நகர்)
தினசரி
10-30, 2-15, 4-45, 7-00
Bruce Lee in
FIST of FURY
(Adults Only)
புரூஸ்லியின் திகிலூட்டும் பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த படம். இதுவே யாழ். நகரில்கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.

ஹரன் (யாழ். நகர்)
10-30, 2-30,
4-30, 6-15
Bruce lee in
DRAGON STRIKES AGAIN
ஆரம்பம்முதல் இறுதி வரை குங்பூ, கராட்டி சண்டைகள் உங்களை வியப்பில் ஆழ்த்தும்

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30 only
Lee Van Cleef...
Ernest Bognine.
ESCAPE from NEWYORK
பிரமாண்டமான சிறைக் கூடங்களில் — திகிலும்— பரபரப்பூட்டும் இரவுளில் கைதிகள் தப்பிச்செல்லும் சாகசங்கள் மெய் சிலிர்க்கவைக்கின்றன.

லிடோ சினிமா
Daily 4 Shows
CONAN THE BARBARION

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-30
Charlie Chaplin
MODERN TIMES
(Color)

வின்ஸர் (யாழ்)
10.30, 2.00, 4.30, 6.45
EBONY IVORY AND JADE
3 வெவ்வேறு அழகிய பெண்கள் ஒரே பாணியில் சண்டை. போடும் திகிலூட்டும் விறுவிறுப்பான சண்டைக்காட்சிகள் நிறைந்த வண்ணச் சித்திரம்.
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
3 முதல்
THE BODY



# இந்திராவின் அரசியல் வரலாறு

1917 நவம்பர் மாதம் 19-ல் அலகாபாத்தில் இந்திரா பிறந்தார்.

ஜவஹர்லால் நேரு கமலா தேவி தம்பதிகளின் ஒரே புதல்வி திருமதி காந்தி.

12 வயதில் குழந்தைகள் அணி ஒன்றை நிர்வகித்தார். சுதந்திரப் போராட்ட காலத்தில் பிரிட்டிஷ் படையினருக்கு அனுப்பப்படும் தகவல்களை வழிமறித்துப் பார்ப்பதே இந்தக் குழந்தைகளின் நோக்கம். பாரத நாட்டின் மகத்தான தலைவர்கள் சந்தித்துப் பேசும் இடமாக விளங்கிய அலகாபாத்திலுள்ள ஆனந்த பவனில் இருந்த சூழ்நிலையே இந்திராவின் அரசியல் சிந்தனையை வளர்த்தது.

சுவிற்சர்லாந்து, ஒக்ஸ்போர்ட், சாந்திநிகேதன், ஆகிய இடங்களில் கல்வி பயின்ற இந்திரா காந்திக்கு அறிவுச்சுடரான அவரது தந்தையிடமிருந்தான கடிதங்களின் வடிவில் தான் நினைவில் நிற்கத்தக்க அறிவாற்றல் புகட்டப்பட்டது.

நேருவின் இந்தக் கடிதங்கள்தான் அவரை ஆற்றல் மிக்க தலைவராக மாற்றியது. இதன் பயனாக சமாதானத்தையும் சுதந்திரத்தையும் பேணிக் காப்பதான மன உறுதியையும் வறுமையை விரட்டுவதன திட்டத்தையும் ஏற்படுத்தியது.

ஒக்ஸ்போர்ட்டில் கல்வி கற்கும்போதே பிரிட்டிஷ் தொழிற் கட்சியில் திருமதி காந்தி சேர்தார் பின்னர் பாரதம் திரும்பிய அவர் அரசியலில் குதித்து பாரத தேசிய காங்கிரஸில் சேர்ந்தார்.

பெரொஸ் காந்தியை திருமணம் செய்த ஆறு மாதத்தில் 1942ல் நடந்த ''வெள்ளையனே வெளியேறு'' போராட்டத்தில் குதித்து சிறைபுகுந்தார். விசாரணை இல்லாமலே 13 மாதங்களுக்கு சிறைவாசம் அனுபவித்தார்.

பல ஆண்டு காலத்துக்கு பிரதமர் ஜவஹர்லால் நேருவின் விருந்தினர்களையும் மற்றவர்களையும் வரவேற்று உபசரிப்பவராகவே செயற்பட்டுவந்தார். இந்தவகையில் பல உலகத்தலைவர்களைப்பற்றியும் உலகப் பிரச்னைகளைப்பற்றியும் நன்குநெருக்கமாகப் பார்த்துப் புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இந்திராவுக்குக் கிடைத்தது

1959 பெப்ரவரி மாதம் பாரத தேசிய காங்கிரஸின் தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தந்தையாரின் மறைவுக்குப் பின்னர் 1964ம் ஆண்டு செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சராக அரசில் சேர்ந்தார். திரு லால் பகதூர் சாஸ்திரி திடீரென்று காலமானதைத் தொடர்ந்து 1966ல் பிரதமரானார்.

பங்களாதேஷின் சுதந்திரத்துக்கும் பாகிஸ்தானுக்கு எதிரான யுத்தத்தில் பாரத நாட்டின் வெற்றிக்கும் வழிவகுத்த 1971ம் ஆண்டுப் போரில் திருமதி காந்தியின் தலைமையாற்றலை இந்தியா பெற்றது.

1977ல் தேர்தலில் தோல்வியுற்று 34 மாதங்கள் ஜனதா ஆட்சியிலிருந்த போது எதிர்க்கட்சி ஸ்தானத்திலிருந்தபோது கட்சியின் நலனுக்காக அயராது உழைத்தார்.

பின்னர் 1980ல் உலகநாடுகளே வியக்கும் வகையில் பெருவெற்றி பெற்று மீண்டும் பிரதமரானார்.

66ம் ஆண்டிலிருந்து 15 ஆண்டுகள் இவர் பிரதமராக இருந்த காலத்தில் பல்வேறு சாதனைகள் மூலம் உலக தலைவரானார் உ... களில் மன உறுதிபடைத்தவர் என்று பாராட்டையும் பெற்றார்.

உலகநாடுகள் அனைத்துக்குப் சென்றுள்ள திருமதி காந்தி புதுடில்லியில் அணிசேரா

[5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க]

1917 நவம்பர் 19ல் பிறந்தார்.
1942ல் திரு காந்தியைத் திருமணம் செய்தார்.
1959ல் பாரத தேசிய காங்கிரஸ் தலைவரானார்.
62ல்: விஸ்வகலா விருதுபெற்றார். கணவர் காந்தி காலமானார்.
64ல்: மத்திய தகவல் செய்தி ஒலிபரப்பு அமைச்சரானார்
66ல் ஜனவரி: பிரதமரானார் விஸ்வபாரதி பல்கலைக்கழக தலைவரானார்.
71ல்: வங்கதேசப்போர் நடந்தபோது இந்தியாவுக்கு வெற்றிகிடைத்தது.
72ல்! பாரத ரத்ன விருது வழங்கப்பட்டது.
77ல்: தேர்தலில் தோல்வி.
80ல்: தேர்தலில் அமோக வெற்றியீட்டினார். மகன் சஞ்சய் காலமானார்.
83ல்: அணிசேராத் தலைவியானார்.
ஐ. நா. மக்கள் தொகை விருது.

# இறுதிக்கிரியைகள் முடியும்வரை தோட்டத் தொழிலாளர் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

திருமதி இந்திரா காந்தியின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக இலங்கையிலுள்ள இந்திய மலையகத் தோட்டத் தொழிலாளர்களை இன்று முதல், திருமதி இந்திரா காந்தியின் இறுதிக் கிரியை வரை துக்கம் அனுஷ்டிக்கும்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்பொதுச் செயலாளர் திரு எம் எஸ். செல்லச்சாமி வேண்டுகோள் விடுத்துள்ளார். திருமதி இந்திரா காந்தியின் மறைவு குறித்து. அவரது புதல்வர் திரு, ராஜீவ் காந்திக்கும் திரு. செல்லச்சாமி அனுதாபச் செய்தி ஒன்றை உடனடியாக அனுப்பி வைத்துள்ளார். (மா)

## "முழு உலகுக்கே பேரிழப்பு"

(கொழும்பு)

''இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு ஏற்பட்ட மரணம், இந்தியாவுக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்குமே ஏற்பட்டுள்ள நஷ்டம்'' என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு எம் எஸ் செல்லச்சாமி திருமதி இந்திரா காந்தியின் மரணச்செய்திகுறிதது தொலைபேசி மூலம் 'ஈழநாடு' அலுவலகத்துக்கு கவலை தெரிவித்தார்.

திரு. எம்.எஸ்.செல்லச்சாமி தமது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''இந்தியா மட்டுமன்றி ஆசிய நாடுகள் விடுதலை அடைவதற்கு முக்கிய காரண கர்த்தாவாக இருந்த ஜவஹர் லால் நேருவின் வாரிசான திருமதி இநதிரா காந்தி இந்தியாவின் பெருமையை உயர்த்தி வந்தார். ஜனநாயகப்பாம் பரியத்தை உயர்த்திவந்த பெருமையும் திருமதி இந்திராவுக்கே சேரும்,

''திருமதி இந்திரா காந்திக்கு மட்டுமல்ல, உலகத்தின் உன்னத புருஷர்களுக்கு ஏற்படும் மரணங்களுக்குப்பொறுப்பாக இருக்கும் காட்டுமிராண்டித் தனமான செயல்களைவிட்டு மனிதாபிமானமுள்ள எவரும் கண்டிக்கத்தான் செய்வர். கண்டிக்க வேண்டும் மேலும் இதுபோன்ற பயங்கரச் செயல்கள் நடைபெற அனுமதிக்கக் கூடாது'' (மா)

## 1966-ம்ஆண்டிலிருந்து 15 வருட ஆட்சி

பெண்மைக்குரிய வெட்கத்துடன், அரசியல் அனுபவமுள்ளவராக திருமதி இந்திராகாந்தி லால்பகதூர் சாஸ்திரி இறந்ததையடுத்து இந்தியாவின் 3வது பிரதம மந்திரியானார், ஆயினும் மிகவும் குறுகிய காலத்தில் முழுஉலகுமே வியக்கும்வகையில் ஒரு தன்னிகரற்ற தலைவராக இவர் மாறினார்.

இதனையடுத்து இறக்கும் வரை 15 வருடங்கள் அவர் இந்தியாவை தொடர்ச்சியாக ஆட்சிபுரிந்துள்ளார்.

1977ம் ஆண்டு குறுகிய காலம் ஜனதா கட்சியினால் இவர் தோற்கடிக்கப்பட்டிருந்தார் ஆயினும் இவர் மீண்டும் 3 வருடங்களில் மிகப்பெரும் பான்மைப்பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றினார். எதிர் வரும் ஜனவரியில் அவர் பொதுத்தேர்தல் ஒன்றைச் சந்திக்கவும் தயாராகிக்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## ஈழத்தமிழருக்கு பேரிழப்பு தமிழீழ விடுதலை அணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''ஈழத்தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய ஒளிவிளக்கு அணைந்துவிட்டது. அன்னை இந்திராவின் மரணம் ஈழத்தமிழர்க்கு பேரிழப்பாகும். இலங்கைத் தமிழர்மீது நடாத்திய இனப் படுகொலையை தடுத்து நிறுத்திய அன்னை இந்திராவை தமிழினம் என்றும் நினைவு கூரும்''

இவ்வாறு இந்தியப் பிரதமரின் மறைவு குறித்து தமிழீழ விடுதலை அணியினர் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அச்செய்தியில் ''அன்னை இந்திராவின் மறைவால் துயருறும் இந்திய மக்களின் துயரத்தில் ஈழத் தமிழர்கள் பங்கு கொள்வதை உலகுக்கு எடுத்துக் காட்டுமுகமாக தமிழ்ப்பகுதிகளில் சகல இடங்களிலும் இல்லங்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களிலும் வாகனங்களிலும் கறுப்புகொடி ஏற்றியும் மாணவ மாணவிகள் யாவரும் கறுப்புப் பட்டி அணிந்தும் பாடசாலைக்கு செல்லுமாறும் அன்னை இந்திராவின் மறைவை ஒட்டி தமிழ்ப்பகுதிகளில் ஒருவாரகாலத்துக்கம் அனுஷ்டிக்குமாறும் தமிழீழ விடுதலை அணிதமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கிறது. (மா)

## யாழ். பிரஜைகள் குழு செயலாளர்

(யாழ்ப்பாணம்)

''தமிழ்பேசும் மக்கள் இக்கட்டான நிலையில் இருக்கின்ற பொழுது அவர்களுக்கு ஒரு புத்துயிர் அளிக்கக்கூடிய நிலையில் காண்பதற்கு வழிவகுப்பதற்காக தனது நேரத்தில் பெரும்பகுதியை செலவிட்டு வந்த; தமிழ் மக்கள் தெய்வமாகவும், தாயாகவும் போற்றி வந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியடைகின்றோம்.''

யாழ். பிரஜைகள்குழு செயலாளரும், இந்திய தூதுவராலய சட்ட ஆலோசகருமான திரு. ஆர். பாலசுப்பிரமணியம் வெளியிட்ட அனுதாபச்செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (க)

## படுகோழைத்தனமானசெயல்

(புதுடில்லி)

பாரதீய ஜனதாக்கட்சித்தலைவர் திரு அடல் பிஹாரி வாஜ்பாய், திருமதி காந்தி கொலை செய்யப்பட்டது படு கோழைத்தனமான செயல் என்று கண்டித்துள்ளார்.

### "காட்டுமிராண்டித் தனமானது"

முன்னாள் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் இச்செயல் மிகவும் காட்டுமிராண்டித்தனமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் தவிர இந்திய மாநில முதலமைச்சர்களும் மற்றும் அரசியல் தலைவர்களும் கண்டனமும், கவலையும் தெரிவித்திருப்பதுடன் புதுடில்லிக்கு படையெடுத்தவண்ணம் இருக்கின்றனர்.

## சீக்கிய குருமார் கண்டனம்!

(புதுடில்லி)

திருமதி காந்தி சுடப்பட்டதைக் கண்டித்து ஐந்து பிரதான சீக்கிய உயர் மதகுருமார்கள் அதிர்ச்சியும், கவலையும் கண்டணமும் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் சீக்கிய பொற்கோயில்' வளாகத்தினுள் இந்திய இராணுவம் ஊர்வலை மேற்கொண்டதையடுத்து திருமதி காந்திக்கு அடிக்கடி பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்ட வண்ணமிருந்தன.

இதனையடுத்து அவரின் பாதுகாப்பு தீவிரமாகப் பலப்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (கி)

இப் பத்திரிகை ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.

## ஆணையாளர் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் மறைவையொட்டி நாளை யாழ் மாநகரசபையில் அரைக்கம்பத்தில் கொடி பறக்கவிடப்படும்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம், கிழக்காசியாவின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் சமாதான ஒளியாகவும் விளங்கிய பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் இழப்பு மனித குலத்திற்கே ஒரு பாரிய இழப்பாகும் என்றார்.

## யாழ். நகரில் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும்வகையில் இரங்கற்கூட்டம் ஒன்றை தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். நகரில் நடத்தவிருக்கிறது.

## திருமதி சிறிமா செல்கிறார்

திருமதி இந்திரா காந்தியின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் திரு அனுரா பண்டாரநாயக்காவும்புறப்பட்டுச் செல்கிறார்கள் இதுபற்றிய தகவலை அவர் இந்திய ஸ்தானிகருக்கு அறிவித்துள்ளார்.

## கூட்டணி கோரிக்கை

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் திருமதி காந்தியின் மறைவுக்கு துக்கம் அனுஷ்டிக்குமுகமாக இறுதிச் சடங்குகள் முடியும் வரை தமிழ் மக்கள் வீடுகளிலும் கடைகளிலும் கறுப்புக்கொடிகளை பறக்கவிடுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு மு.சிவசிதம்பரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.